1943ம் ஆண்டில் திரு செல்லப்பாவின் மறைவின் பின் தம்பையா, திருநாவுக்கரசு ஆகியோரின் கைகளுக்கு முகாமைத்துவம் மாறியது. 1-8-1946ல் இப்பாடசாலையை 13 ஆசிரியர்கள், 371 மாணவர்களுடன் அரசாங்கம் பொறுப்பேற்றது. ஆனால் ஏனைய அரசாங்க உதவிபெறும் பாடசாலைகள் 1961லேயே அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. 1938ல் பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்ட P.G. தம்பியப்பா, பாடசாலையின் சகல துறைகளின் அபிவிருத்தியிலும், கண்ணும் கருத்துமாக இருந்தார். இவர் காலத்தில் பல்கலைக்கழக புகுமுக வகுப்பும், உயர்தர பாடசாலை தராதரவகுப்பும் (H.S.C) இக்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டன. காலஞ்சென்ற சிறந்த அரசியல்வாதியும், பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த திரு அமிர்தலிங்கம் அவர்கள், இப் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழக கலைத்துறைப் பிரிவுக்கு அனுமதி பெற்ற முதல் மாணவன் ஆவார். அவர் இக்கல்லூரிக்குத் தேடிக்கொடுத்த இப்பெருமை குறிப்பிடத்தக்கதே.

பாராளுமன்றத் தேர்தலில் கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடுவதற்காக, 1947ல் திரு தம்பியப்பா அதிபர் பதவியை இராஜினாமா செய்தார்.

திரு D.C. அருளானந்தம் அவர்கள் 1948 லிருந்து 31-07-1949 வரை அதிபராக இருந்தார். இவருடைய காலப்பகுதியிலேயே இக்கல்லூரியின் பாலர்வகுப்பறை மண்டபம் கட்டப்பட்டது.

<u>திரு. S. சுப்பிரமணியம்</u>

சுதுமலையைச் சேர்ந்த திரு S. சுப்பிரமணியம், அவர்கள் 01-08-1949லிருந்து 31-12-1960 வரை அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இது மறுபடியும் கல்லூரியின் ஒளிமயமான காலம் என்றே சொல்லலாம். 1951ல் மத்திய மகா வித்தியாலய கட்டிட அமைப்புக்கமைய, வகுப்பறைகளும் 4 ஆய்வு கூடங்களும் சேர்ந்து அமைந்ததாக புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. அப்பொழுது வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராகவும், உதவிக்கல்வி மந்திரியாகவும் இருந்த திரு. கனகரத்தினம் அவர்களின் உதவியுடன் கல்லூரியில் பல கட்டிடங்கள் எழுந்தன. 1955ல் GURUGE BLOCK என்ற புதிய மண்டபம் அமைக்கப்பட்டது. பாடசாலையின் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டது. அத்துடன் எல்லைச் சுவர்களின் ஒரு பகுதியும் கட்டப்பட்டன. பாடசாலையின் ஆசிரியர் குழுவில் அப்பொழுது சேவையில் இருந்த திரு இராசசுந்தரம் அவர்களின் அயரா ஊக்கத்தினால் கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சியடைந்தது. கல்லூரி கால்பந்தாட்டக் குழு பல போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டி கல்லூரிக்கு புகழ் தேடிக்கொடுத்தது. திரு சுப்பிரமணியமும் அவரைத் தொடர்ந்து வந்த அதிபர்கள் சிலரும் வேறு அரசாங்கப்பாடசாலைகளில் முன்பே அனுபவமிக்க, நிர்வாகத்திறமை பெற்ற அதிபர்களாகக் கடமை புரிந்துள்ளனர்.

<u>திரு. V. தம்பு</u>

திரு. A. T. சபாரத்தினம் 01-06-1961லிருந்து 31-12-1962 வரை அதிபராக சேவையில் இருந்தார். பின் 01-01-1963லிருந்து 17-10-1968 வரை திரு. V. திம்பு அவர்கள் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவருடைய சேவைக் காலத்தில் விக்டோரியாக் கல்லூரி மேலும் பிரபல்யமடைந்தது. K. பாலச்சந்திரன் இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற இரண்டாவது மாணவர். அவர் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டார். திரு. தம்பு அவர்களின் முயற்சியினால் கல்லூரியில் உயர்தர வகுப்பு ஒன்றியம் அமைக்கப்பட்டது. அவருடைய சேவைக்காலத்திலேயே அங்கு மனையியல் கூடம் ஒன்று அமைக்கப்பட்டது. இவற்றிலும் மேலாக இவரின் சேவையின் சிறப்பாகவும், அவரின் நீங்கா நினைவாகவும் திகழ்வது, பிரதான மண்டபத்தில் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட அழகான சிவகாமசுந்தரி சமேதரரான நடராசா சிற்பமே. திரு. தம்பு அவர்களின் சேவையைத் தொடர்ந்து திரு. V.K. தியாக ராஜபிள்ளை அதிபராகக் கடமைபுரிந்தார். இவரைத் தொடர்ந்து 15-11-1968லிருந்து 03-01-1972 வரை அளவெட்டியைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றிருந்தார். இக்கல்லூரி நிர்வாகத்தை ஏற்பதற்கு முன், இவர் அளவெட்டி அருணோதயா கல்லூரியில் அதிபராகவிருந்து அதனைக் கட்டியெழுப்பிய சிற்பியென பெருமைப்படுத்தப்பட்டவர். இவரைத் தொடர்ந்து சிறந்த ஆசிரியராகக் கருதப்பட்ட திரு. N. சிவஞானம் அவர்கள் 04-01-1972லிருந்து 30-06-1974வரை அதிபர் பதவியை ஏற்று சேவை புரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. V. இராசசுந்தரம்

இப்பாடசாலையின் திறமைமிக்க பழைய மாணவரும், அப்பொழுது ஆசிரியர் குழுவில் இருந்து, பாடசாலைக்கு அரிய சேவை புரிந்து வந்தவருமாகிய திரு. V. இராசசுந்தரம் அவர்கள் 01-07-1974ல் அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவருடைய சேவைக் காலத்தில் பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்பாக 1976ல் இடம் பெற்றது. நீண்டகாலமாக இவர் கல்லூரியுடன் கொண்டிருந்த தொடர்பும், கல்லூரியின் பால் அவர் கொண்டிருந்த அபிமானமும், கல்விமான்களுடன் கொண்டிருந்த தொடர்பும், அரசியல் வாதிகளுடன் இருந்த செல்வாக்கும் சேர்ந்து, இருந்தமையால் கல்லூரியின் நூற்றாண்டுவிழா சிறப்பாக அமைந்தது. இவ்விழாவுடன் ஒட்டி இவர் ஒழுங்கு செய்த பொருட் காட்சியும் களியாட்டு விழாவும் கல்லூரி மைதானத்தில் ஒரு மாதகாலம் வரை இடம் பெற்றது. இது மக்களைக் கவர்ந்திருந்த ஒரு நிகழ்ச்சியாகும். ஜேர்மனியிலிருந்து வருகை தந்திருந்த கால் பந்தாட்டக் குழு ஒன்றுடன் கல்லூரிக் கால் பந்தாட்டக் குழுவினர் பங்கு கொண்ட போட்டிகளும், ஒரு மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் இவர் நடாத்திய, மக்களைக் கவர்ந்த நிகழ்ச்சிகளாகும். ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும், அங்கேயே சிறந்த ஆசிரியருமாகக் கடமைபுரிந்த, திரு A.M. ஸ்பென்சர் அவர்கள் இராசசுந்தரத்திற்கு உதவி அதிபராகவிருந்து கடமையாற்றியுள்ளார். திரு இராசசுந்தரம் 15-05-1977லிருந்து இளைப்பாறினார். இவருடைய நிர்வாகம் முடிவடைய திரு. அருணாசலம் அவர்கள் 13-05-1978ல் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்ட காலத்து, இடைக்கால ஒருவருடப் பகுதியில் திருவாளர்கள் ஸ்பென்சர், சங்கரப்பிள்ளை ஆகிய இருவரும் அதிபர்களாகக் கடமை புரிந்துள்ளனர்.

திரு. K. அருணாசலம்

வட்டுக்கோட்டை அதிபராக 13-05-1978லிருந்து 28-09-1987 வரை சேவை புரிந்துள்ளரர். இப்பாடசாலையின் கட்டிட வேலைகள் சிலவற்றை முன்னின்று செய்து முடிப்பதற்காகவும், அவை நிறைவேறியதும் அவர் தமது பழைய பாடசாலைக்கே திரும்பலாம் என்ற ஒப்பந்தத்தின் பேரில் இக்கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். ஆனால் அவருக்குக் கிடைத்த பூரண ஒத்துழைப்பின் காரணமாக, அவ தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் தனது சேவையை இக்கல்லூரிக்கே அர்ப்பணிக்கக் கூடியதாக இருந்தது.

கல்லூரியின் சரித்திரத்தில் இவருடைய காலம் குறிப்பிடத்தக்க தொன்றாகும். கல்லூரரி கட்டிட அபிவிருத்தி, கல்லூரியின் தென்பகுதிவரை எல்லைச்சுவரை விஸ்தரித்தமை, மற்றும் கல்லூரிக்கு ஏற்பட்டிருந்த பல்வேறு பிரச்சினைகளை தீர்த்தமை, இவருடைய திறமையினால் நிறைவேற்றப்பட்ட சில விடயங்களாகும். கல்லூரி அபிவிருத்தி சபையின் பண நெருக்கடி விடயங்களை ஆராய்ந்து தீர்த்தமையால், கல்லூரிக்கு மேலும் இரண்டு பரப்பு நிலத்தை வடக்குப் புறமாக சேர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஒரு சிறிது காலம் கல்லூரியின் பரீட்சை முடிவுகளில் விழுக்காடு ஏற்பட்டன. சிறந்த ஆசிரியர்களின் ஊக்குவிப்பு இருந்தும், உயர்தர வகுப்பு பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைய முடியவில்லை. ஆனால் இவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக, தொடர்ந்து பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். இவர் பதவிக்கு வந்த இருவருடங்களில், பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு ஒரு மாணவன் அனுமதி பெற்றான். 1981ல் 4 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். கல்லூரியின் சரித்திரத்திலேயே குறிப்பிடக் கூடிய முறையில், பவானி, இரமணன் ஆகிய இருவரும் கல்லூரியிலிருந்து மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் மாணவர்களாவர். பவானி அதிகூடிய மொத்தப்புள்ளிகளை பெற்று, கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெற்று, கல்லூரிக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளார். மற்றும் ஒருவர் கொத்தலாவல கல்விக் கழகத்தில் பொறியியல் துறைக்குழி, இன்னுமொருவர் விஞ்ஞான பீடத்திற்கும் அனுமதி பெற்றனர். 1982ல் வெளிவந்த பலக-லைக்கழகப் புகுமுக பரீட்சையில் 11 மாணவர்கள் சகல துறைகளுக்கும் அனுமதி பெற்று, கல்லூரிக்குப் புகழைத்தேடிக் கொடுத்தனர். இவர்களில் ஒருவர் கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கும், மற்றுமொருவர் யாழ் மருத்துவக் கல்லூரிக்குமாக இருவர் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ் நிலை, திறமைமிக்க ஆசிரியர்களை அடிக்கடி மாற்றப்பட்டமை, ஆகிய காரணங்களால் கல்லூரியின் கல்வித் தரத்தில் பாதிப்பு ஏற்படுமோ என்ற தயக்கம் ஏற்பட்டிருந்தாலும், கல்லூரியின் கல்வித்திறன் குறைவடையவில்லை என்றே கூறலாம். பரீட்சை முடிவுகள் சிறப்பாகவே இருந்துள்ளன. இவர் காலப் பகுதியில் ஏறக்குறைய 30 மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுந்தனர் என்று கூறலாம்.

கல்லூரி விளையாட்டுத்துறை உட்பட சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. இக்காலத்துக்கு முன்பிருந்த காலப்பகுதிகளில் கால்பந்தாட்டப் போட்டிகளில் பல வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொள்ள முடியவில்லை. 1981ல் முதல் தடவையாக 15 வயதுக்குக் கீழ்ப் பிரிவினரின் போட்டிகளில் கலந்து கொண்டு 18 போட்டிகளில் வெற்றிபெற்று, மாவட்ட வெற்றிக் கிண்ணத்தை இக்கல்லூரி பெற்றுக் கொண்டது. 17 வயது க்குட்பட்ட கால்பந்தாட்ட போட்டி பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாகும். கொழும்பிலிருந்து வந்த இரு சிரேஷ்ட பிரதம கல்வி அதிகாரிகள், யாழ்பாண பிரதம கல்வி அதிகாரி, மற்றும் கொழும்பு, யாழ்ப்பாண வியையாட்டுத் துறை அதிகாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமளித்திருக்க, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய குழுவிற்கும், விக்டோரியா கல்லூரி குழுவிற்கும் இடையில் இடம் பெற்ற போட்டியில், இக்கல்லூரி குழு வெற்றியீட்டி, வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொண்டது. 1985ல் போட்டி களெதுவும் இருக்கவில்லை. ஆனால், தொடர்ந்து வந்த காலங்களில் ஒரு குழுவாதல் வெற்றியீட்டி வந்தது குறிப்பிடத்தக்கது.

வட்டாரம், மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகளிலும் விக்டோரியாக் கல்லூரி திறமையாகச் செய்து, முன்னிலையில் நின்றது. 1982ம் ஆண்டில் இக்கல்லூரியில் யாழ்மாவட்ட சாரணர் பாசறை இடம் பெற்றபோது, யாழ் மாவட்ட சாரணர்கள் பங்கு கொண்டனர். முதல் தடவையாக ஜனாதிபதி சாரணர் நியமிக்கப்பட்டார்.

நீண்டகால இடைவேளைக்குப் பின், பரிசளிப்பு விழாக்கள் தொடர்ந்து இடம் பெற்றன. ஸ்தாபகர் நினைவு உரைகள் சேர்க்கப்பட்டன. சைவப் பெரியாரின் நூற்றாண்டு நினைவு விழா 1978ல் இடம் பெற்றது. அத்துடன் வருடாவருடம் மெய்வல்லுனர் போட்டிகள், உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்று கூடல் விருந்துபசாரங்களும் இடம் பெற்று வந்தன.

சுருக்கெழுத்து, தோல்பொருட்கள் செய்தல் போன்ற தொழிற்கல்வியும் இங்கு புகுத்தப்பட்டது. திரு அருணாசலம் அவர்கள் இளைப்பாறுங்காலத்தில், நாட்டின் கல்வியுலகில் சிறந்த கல்விமானாகவே கருதப்பட்டார். அன்று கல்வித்துறையிலிருந்த பிரதம கல்வியதிகாரிக்கு, அடுத்ததாக இரண்டாவது நிலையில் வைத்துக் கருதப்படத் தக்க கல்விமானாகவும், அன்றிருந்த தமிழ் அதிபர்கள் மத்தியிலும் சிறந்தவராகவும் கணிக்கப்படத்தக்கவர் என்று 1987ல் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு மன்சூர் குறிப்பிட்டுள்ளார். திரு அருணாசலம் அவர்களைத் தெடர்ந்து திரு. V. M. விஜயரத்தினம் அவர்கள் பதில் அதிபராகக் கடமையாற்றினார். அதன்பின் பதிவிக்கு வந்த திரு. K. K. நடராசா அவர்கள் 04-07-1989 வரை அதிபராகக் கடமையிலிருந்தார். இவரும் அனுபவமிக்க அதிபரானமையால் பாடசாலையின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தினார். கல்லூரி பரீட்சை பெறுபேறுகளும் இவர் காலத்தில் திருப்தியாகவே இருந்தது. இவர் இளைப்பாறியபின. திரு செல்வரத்தினம் பதில் அதிபராக ஒரு மாதகாலம் பணிபுரிந்தார். இவரைத் தொடர்ந்து, கல்லூரியின் ஆசரியர் குழுவிலிருந்த சிறந்த ஆசிரியரான திரு. S. பத்மநாதன் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். கல்லூரியில் நீண்ட நாள் தொடர்பின் காரணத்தால், கல்லூரிப் பாரம்பரியங்களை நன்கு அறிந்திருந்தமையால், அக்காலக் கஷ்ட நிலையிலும், கல்லூரி நிர்வாகத்தைத் திறம்பட நடாத்திச் சென்றார்.

<u>திரு. K. சந்திரபாலன்</u>

திரு. S. பத்மநாதனைத் தொடர்ந்து, திரு. K. சந்திரபாலன் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். அக்கால அரசியல் சூழ்நிலைக் கஷ்டத்தின் மத்தியிலும், கல்லூரியின் தரம் குறையாது கட்டிக்காத்த பெருமையைத் தேடிக் கொண்டார். மாணவர்கள் தொடர்ந்து பல்கலைக்கழக அனுமதி பெற்று வந்தனர்.

அன்றிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக, இக்கல்லூரி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் பகுதிநேர பாட-சாலையாக இயங்கி வந்தது. பின் 13-05-1996ல் திரும்பவும் சுளிபுரத்தில் கல்லூரியில் இயங்கத் தொடங்கியது.

இக்கல்லூரியில் 1995ல் 1368 மாணவர்களும், 52 ஆசிரியர்களும் இருந்தனர். பின்னர் இப்பாடசாலையில் 770 மாணவர்களும், 31 ஆசிரியர்களும் இருந்தனர். திரு. சந்திரபாலன் கல்லூரி மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுத்தார். வழமைபோல் மெய்வல்லுநர் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், மற்றும் சில நிகழ்ச்சிகளையும் நடாத்தினார்.

இவர் திரும்பவும் கல்லூரியின் தரத்தையும், புகழையும் மீட்டெடுக்க அரும்பாடுபட்டார். இவ்வரிய அவர் தொண்டிற்கு, சுளிபுரம், கொழும்பு, இலண்டன், கனடா, பிரான்ஸ் ஆகிய இடங்களிலுள்ள பழைய மாணவர் சங்கங்கள் தம் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்துள்ளனர்.

திருமதி A. வேலுப்பிள்ளை

இப்பொழுது அதிபராக உள்ள திருமதி ஆ. வேலுப்பிள்ளை முன்னைய அதிபரின் நற்பணிகளைத் தொடர்ந்து புரிந்து வருகிறார். அவர் ஓர் அனுபவம் மிக்க சிறந்த செயல் வீரமணியாவர். கஷ்டமான இக்காலத்திலும் கல்லூரியின் நற்பெயரைக் குறைய விடாது உயர்வாக வைத்துள்ளார். யாழ்ப்பணத்தில் இருந்து வருபவர்கள் அனைவரும் அவரை வாழ்த்துகின்றனர். அவரும் மாணவர்களை இயன்றவரை சர்வகலாசாலைக்கு அனுப்புவதில் அக்கறை எடுத்து வருகிறார்.

விக்ரோறியாக் கல்லூரி தனது 125வது வருடத்தைக் கொண்டாடும் போது அவர் அதிபராக இருத்தல் அவருடைய அதிஷ்டமாகும். இக்கொண்டாட்டத்தைத் திறம்பட நடத்தும் பொருட்டு அவர் சுழிபுரம், கொழும்பு, லண்டன், பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா முதலிய இடங்களில் உள்ள பழைய மாணவர்கள் சங்கக்கிளைகளின் ஆதரவைப்பெற்றுள்ளார்.


அவரைக் கனடா பழைய மாணவர் சங்கமும் வாழ்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாலா செல்வம்

**நகைமாளிகை / துரித பணமாற்றுச்சேவை**





## Bala Selvam
## Jewellery & Foreign Exchange



மிக நீண்ட நாட்களாக வாடிக்கையாளரின் நம்பிக்கை, நாணயம்,
நன்மதிப்பு நல்லரவணைப்பு - இவற்றுக்கு உத்தரவாதம் பெற்ற
பாலாசெல்வம் துரித பண மாற்று சேவையினரின் மற்றுமோர் பங்களிப்பு
பாலாசெல்வம் நகை மாளிகை. உங்கள் எண்ணம் போல் வண்ணம்
கொண்ட வனப்புமிக்க, தரமான தங்கநகைகளுக்கும் தனித்துவமான
துரிதபணமாற்றுச் சேவைக்கும் நாடுங்கள் பாலா செல்வம்.




*2480 Eglinton Ave. E. Unit*
*#6, Scarborough, ON.*
*Tel: (416) 264-4000*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHANKANAI FURNITURE INC.

## சங்கானை தளபாடச்சந்தை

**விலையோ மலிவு, தரமோ உயர்தரம், தெரிவோ ஏராளம்.**
**நாடவேண்டிய இடமோ சங்கானைத் தளபாடச்சந்தை**



***VISIT OUR SHOWROOM FOR VARIETY OF SELECTIONS WITH UNBEATABLE PRICE***





***Please call us for further details***
***Tel: 416-264-9642***

***2800 EGLINGTON AVE., EAST, UNIT 4***
***SCARBOROUGH, ONT., M1J 2C9***
***www.chankanaifurniture.com***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்தில் இருந்து.............................................

யாழ் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இன்றுள்ள கல்லூரிகளுள் மிகவும் பழமையானது. இது யாழ்பாணத்தில் அரிசினாற் பதிவு செய்யப்பட்ட முதலாவது இந்துக் கல்லூரியாகும். இங்கு கல்விகற்ற பலர் உலகெங்கும் பரந்து சிறப்புடன் வாழ்கின்றனர்.

பெற்றதாயையும், பிறந்த பொன்னாட்டையும் ஆரும் மறக்க மாட்டார்கள். அதுபோலக் கல்வியை ஊட்டி நல்ல நிலைக்கு ஆளாக்கி விட்ட எம் கல்லூரியையும் நாம் மறத்தல் ஆகாது. நாம் பெற்ற இன்பம் எதிர்கால மாணவர்களும் பெற வேண்டும். அவர்களும் கற்று நல்ல நிலைக்கு வரவேண்டும். இன்றுள்ள நிலைமையால் எம் கல்லூரி தளர்ச்சியடையக் கூடாது. இக்கல்லூரி தளர்ச்சியடையாது இருக்க புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் தாங்கள் தாங்கள் வாழும் நாடுகளில் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவுவது அவசியமாகும். இதற்கு அமைய அவுஸ்திரேலியா, பிரான்ஸ், பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் கனடாவில் வாழ்கின்றனர். இவர்கள் தாம் கல்விகற்றுத் தம்மைத் தலை நிமிர்ந்து வாழ வைத்த கல்லூரியை மறக்கவில்லை. இவர்கள் 1995ல் யாழ்/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் கனடாக் கிளையை ஸ்தாபித்தனர். காலத்திற்கு காலம் நிர்வாக சபை மாறினாலும் கனடாக் கிளை தம் கடமையைத் தொடர்ந்து செய்கின்றது.

வகுப்பறையில் இருந்து கற்கும் மாணவர்கள் விளையாட்டு என்றதும் அதிக மகிழ்ச்சியடைகிறார்கள். உடல் வளர்ச்சிக்கும், உளவளர்ச்சிக்கும் விளையாட்டும், தேகப்பயிற்சியும் மிகவும் அவசியம். இதனாலன்றோ விளையாட்டிற்கும், தேகப் பயிற்சிக்குமென நேரத்தை ஒதுக்கி, ஆசிரியர்களையும் அரசு நியமிக்கின்றது. வருடமொரு முறை மெய்வல்லுனர் போட்டியை நடாத்தி பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்குகின்றனர். காலத்திற்கு காலம் விளையாட்டு போட்டியும் நடத்துகின்றனர்.

இன்று இக்கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதனை அறிந்து கனடாக்கிளை கல்லூரிக்கு அடுத்துள்ள காணியின் ஒரு பகுதியை வாங்கிக் கொடுப்பதின் மூலம் தேவையின் ஒரு பகுதியை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது. இக்காணி வாங்கினால் வலிகாமம் மேற்கில் இது ஒரு பெரிய விளையாட்டு மைதானமாக விளங்கும். விளையாட்டு மைதானம் இல்லாத பாடசாலைகளும் இம்மைதானத்தைப் பயன் படுத்தி மெய்வல்லுனர் போட்டியை நடாத்தி மாணவர்களை உற்சாகப்படுத்த முடியும்.

மேலும் இன்றைய சூழ்நிலையில் பாடசாலை செல்ல அடிப்படை வசதியே இல்லாது கஷ்டப்படும் மாணவர்களுக்கும் ஓரளவு உதவி செய்யவும் கனடாக் கிளை உத்தேசித்துள்ளது. இம் முயற்சிக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் தந்த அனைவருக்கும் நன்றி.

அன்புடன்
சின்னத்துரை சிவராம்
யாழ்/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் நடப்பு ஆண்டு அறிக்கை 2001-2002

சுழிபுரம் பாடசாலையின் 125ம் ஆண்டு பூர்த்தியை சிறப்பு மலருடனும், பழைய மாணவர்களின் பிள்ளைகளினுடைய கலை நிகழ்ச்சிகளுடனும் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

## சங்கத்தின் ஆண்டு நிகழ்வுகள்

புதிய நிர்வாகசபை 2001 ஆனி மாதம் 24ம் திகதி தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொரு நிர்வாக சபை அங்கத்தவர்களின் இல்லத்தில் நிர்வாகசபைக் கூட்டம் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டின் முதல் கட்டமாக 125ம் ஆண்டை கடந்து தலைநிமிர்ந்து நிற்கின்ற வடமாகாணத்தின் முதல் இந்து பாடசாலை எமது பாடசாலை.. அதனை கௌரவமாக கொண்டாடவேண்டும் என்றும் சிறப்புமலர் வெளியிடவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்து வலிகாமம் மேற்கு அரச பாடசாலைகளில் விளையாட்டு மைதானம் 400மிற்றர் இதுவரையும் இல்லை அதனை உருவாக்குவதற்கான இடவசதிகள் எமது பாடசாலைக்கு உண்டு அதற்கு தேவையான காணியை எமது பழைய மாணவர் சங்கம் முடியுமான அளவில் வாங்கி கொடுக்க தீர்மானித்துள்ளது.

விக்ரோறியா கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா கிளை 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 7வது ஆண்டில் கல்லூரியின் சங்கம் பலசெயல்களை முன்வைத்துள்ளனர். அவற்றிற்குரிய செலவு விபரமாக அறியதந்துள்ளனர். காலப்போக்கில் எமது சங்கம் அவற்றை சீர்தூக்கி முடியுமானயளவில் உதவிபுரிவோம் என்ற நம்பிக்கை என்ற எமது கைகளை உயர்தியுள்ளார்கள்.

கல்லூரியில் சேவையாற்றியவர்கள் இன்று பலர் கனடாவில் வாழுகின்றனர் அவர்களை இவ்விழாவில் கௌரவிக்கவும், மறைந்த எமது சங்க உறுப்பினர் திரு கயிலாயபிள்ளை விக்கினராஜாவின் சேவையையும் சங்கம் கௌரவிக்க தீர்மானித்துள்ளது.

## பூங்கா ஒன்று கூடல்

சங்கத்தின் வருடாந்த பூங்கா ஒன்று கூடலும் பொதுக்கூட்டமும் யூன்மாதம் 24ம்திகதி 2001ல் மோனிங்சையிட் பூங்காவில் நடைபெற்றது. அத்துடன் விளையாட்டிலும் வினோத உடைப்போட்டியிலும் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு சமுகம் கொடுத்திருந்த சிரேஷ்ட உறுப்பினர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கனடாவில் உள்ள யாழ் பாடசாலைகள் பழைய மாணவர் சங்கங்களினால் நடாத்தப்பட்ட மென்பந்து விளையாட்டில் எமது பாடசாலைப் பழைய மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார்கள்.

2002 பூங்கா ஒன்று கூடல் இவ்வருடமும் நடாத்தவுள்ளோம் விபரங்கள் பின் அறியத்தரப்படும்.

எமது பாடசாலைப் பழைய மாணவர் சங்கம் பல நாடுகளில் இயங்கி வருகின்றது. பாடசாலை அபிவிருத்தியில் எல்லா சங்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மிகவும் நன்று. இது எமது சங்கத்தின் நோக்கம். ஆதியில் எவ்வளவு சிறந்த பாடசாலையாக திகழ்ந்ததோ அதைபோன்று முன்னேற்ற வேண்டும். அதை பழைய மாணவர்களாகிய நாம் கற்பித்த ஆசான்கள், ஊர்மக்கள் எல்லோருடைய ஆதரவையும் உறுதுணையையும் கேட்டுக் கொண்டு ஆண்டவன் ஆசியுடன் எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்..

செயலாளர்
சி.துலகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MEMBERS OF**

**J/ CHULIPURAM VICTORIA COLLEGE OSA -(CANADA)**

ALAGARAJAH .T
AMBALAVANAR .S. Mrs.
ANANTHARAJAH .M
ASOK KUMAR .N. Mrs.
BALACHANDRAN .K
BALACHANDRAN .V
BALACHANDRAN .T
BALAKRISHNAN .K
BALAKRISHNAN .T
BALASUBRAMANIAM .R
BALASUNDARAMOORTHY .N
BASKARAN .S
CHITHRANANDA .S
GANTHARUBAN .V
GUNARATNAM .I. Mrs.
JEYAKANTHAN .S
JEYARATNAM .R. Mrs.
KALANATHAN .S
KAMALANATHAN .A
KAMALANATHAN .K. Mrs.
KANAGARATNAM .V
KANAGASABAI .V Mrs
KANANATHAN .K
KANDIAH .M
KANDIAH .K
KASIVISVANATHAN .K
KEIRUPAKARAM. S
KIRUPAKARAN .S

KRISHNAKUMAR .A
KUGANESAN .S
LOGENDRALINGAM R.N.
MAYA THIRAVIIAM .K
MURALITHARAN .R
MURUGATHASAN .V
MUTHUKRISHNAN .K
MUTHUKUMARASOORIAR .K
MUTTHUCUMARASAMY Kurukkal .V
NADARAJAH .K
NAGAMANY .V
NAGARAJA .S
NARAYANAPILLAI .N
NATHAN .V
NAVANEETHAKRISHNAN .V
NAVARATNAM .M.
PARAMASAMY .C
PARAMESWARAN .S
PARARAJASINGHAM .S
PERIYATHAMBY .S
PUSPARAJA .M
RAJAKUMAR .M
RAJAMOHAN .R
RAJASINGHAM .T
RAJENDRAN .A
RANGANATHAN .A
RATNAKUMAR .J Mrs.
RATNAM .S

RATNARAJAH .M
RAVEENDIRAN .N
RAVICHANDRAN .S
SABARATNAM .S Dr.
SAMY APPATHURAI
SANGARAPILLAI .V
SANTHIRAMOHAN .A
SARVESWARAN .P
SARVESWARAN .V. Mrs.
SATCHI KANDIAH
SATKUNAM .N
SEGARAN .P
SELLAPPAH .N. Dr.

SIVASUBRAMANIAM KUMARASAMY
SRIPATHY .P
SRITHARAN .S
SUBRAMANIAM .S
SUGI SRISKANDA
SUNTHARAN .P
SURESHKUMAR .T
SUTHARSHAN .M
SUVENTHIRANATHAN .R
THARAHAN .M
THAVACHELVAM .K
THAYANANTHA .S
THEVARAJAH . B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MEMBERS OF**
**J/ CHULIPURAM VICTORIA COLLEGE OSA -(CANADA)**

SELVALINGAM .V
SELVANAYAGAM .R. Mrs.
SENTHILNATHAN .T
SETHUNATHAN .T
SHAMUGANANDA .S
SHANMUHANATHAN .T
SIVA SINNATHAMY .E Mrs.
SIVAGNANA .S.Mrs.
SIVAKUMAR .K
SIVALINGAM .K
SIVANANTHAJOTHY .D. Mrs.
SIVAPPIRAGASAM .G
SIVARAM .S
SIVARULRASA .K
SIVASUBRAMANIAM KANDIAH
THEVATHURAI .R
THIGAMPARALINGAM .A
THULAGANATHAN .S
V IVEKANANTHARASA .M. Mrs.
VAIRAMUTTU .S
VELAUTHAPILLAI. .V
VELAUTHER .S
VIGNESWARAN .K
VIJEYASEKARAN .M
VETRIVELU THASAN
VIVEKANANDAN .S
WIJEYAKANTHAN .V
YOGALINGAM . M . Mrs.
YOGESWARAN .D


**Ross**
**Convenience & More**



இலங்கை, இந்தியா உணவுப்
பொருள் மற்றும் மளிகைப்
பொருட்களை பெற்றுக் கொள்ள
Jane & Finch
சந்திப்பில்

***1 Yorkgate Blvd. Unit 103,***
***Downsview, Ontario M3N 3A1***
***Tel/Fax: (416) 739-0707***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டாக்டர். பகீரதன் (பகி)


## Dr. Bahee

## டாக்டர். சிவநேசான்

## Dr. Shanmugam







**சகல பல்வைத்திய சேவைகளுக்கும்**

உங்கள் ஆரோக்கியச் சிரிப்பு - என்றென்றும்

HEALTHY SMILE - FOREVER

சகல பல் வைத்திய சேவைகளும்




**KENNEDY & FINCH**
**3852 Finch Ave. E., Suite 207**
**Scarborough, ON**
**416-291-1085**

**KEELE & FINCH**
**1280 Finch Ave. W., Suite 709A**
**North York, ON**
**416-728-0345**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நிர்வாகத்தின் கீழ்

# EMBASSY ULTRA MART

**SRI LANKAN, NORTH INDIAN, SOUTH INDIAN AND CANADIAN GROCERIES**

- Lotto
- TTC Tickets
- Phone Cards
- Key Cutting
- Gift Items
- News Papers
- Cigarettes



- இலங்கை, இந்திய
- உணவுப் பொருட்களையும்
- பலசரக்கு வகைகள், பால் வகைகள்
- பழ வகைகள், மற்றும்
- உடன் மரக்கறி வகைகள்



*யாவற்றையும் மொத்தமாகவோ சில்லறையாகவோ*
*மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள*

**Embassy Ultra Mart**

**101-5200 Finch Ave., East**
**Scarborough ON**
**(Middlefield & Finch)**

**Tel: (416) 332-8451**
**Fax: (416) 282-4978**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VICTORIA COLLEGE OLD STUDENTS ASSOCIATION

### CANADA BRANCH

After many informal meetings at Mr. K. Sivasubramaniam's house, we had the inaugural meeting at Applewood Heights Secondary School, Mississauga on February 12th, 1995. It was well attended.

The election of office bearers took place and the committee members decided to make a monetary contribution to the alma mater. The money was collected and sent to the alma mater. We made a substantial contribution and the money is kept in fixed deposit. The school using the interest for their immediate expenses. The committee was mainly interested in collecting as much money as possible and sending to the alma mater. We had to do it, because the school needed some funds.

Meetings were then held in various committee member's houses, and a constitution was adopted. Thereafter, we had various correspondence and telephone conversations with the Principal Mr. Santhirarapalan, and Mr. Inthirarajah, about how we could help our alma mater. These two individuals kept us posted of the requirements for the school. We had frequent contacts with the alma mater. I would like to take this opportunity to thank Mr. Santhirapalan and Mr. Inthirarajah for all their help and encouragement.

In this period we opened a web site for Victoria College. The web site is Victoria College Hotmail.Com. For this we have to thank Mr. Nandakumar.

But due to a variety of reasons the branch was inactive in Canada. It was revived after a get together. The get together was held on June 24th, 2001 at Morningside Park, Scarborough. It was well attended. It was indeed a great success. At the end of the day's activities a new committee was elected to run the activities of the association. Mr. Sivaram and his committee were elected to run the Old Students' Association. I wish them all success.

In conclusion, I would like to say A BIG THANK YOU to all members and in particular to our out going Adviser Mr. S. Sivasubramaniam, Secretary Mr. Sivarulrasa Treasurer Mr. Balachandran and Committee Member Mr. Thulaganathan. I also like to thank those members who helped at the Morningside Park Get Together and at the Applewood Heights Secondary School Inaugural Meeting.

Let J/Victoria College, Chulipuram, grow from strength to strength and provide learning opportunities for tens of thousands of students in Jaffna and neighbouring districts.

Thank You

R. Balasubramaniam

(PAST PRESIDENT)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைக் கல்வி அறிவாளராக ஆக்கிய கல்லூரியை நினைவுகூர்வோம்

இன்று 125வது ஆண்டைப்பூர்த்தி செய்து உலகெல்லாம் போற்ற விழாவெடுக்கும் நிலையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரிதான் எம்மைப் போன்ற பலரைக் கல்வி அறிவாளராக்கியது என்பதை நினைவில் இருத்துவோம். 125 ஆண்டுக்கு முன்னர் அந்நியர் ஆட்சிநடை பெற்ற காலம். அவர்கள் ஆட்சிப்பீடத்திலிருந்தமையால் யாழ்ப்பாணத்தில் இருந்த உயர்கல்வி நிலையங்களில் பல கிறிஸ்தவ கல்லூரிகளாக இயங்கிவந்தன. அதனால் தமிழர்கள் தங்கள் பூர்விகசமயமாகிய சைவசமயத்தைக் கைவிட்டு கிறிஸ்தவர்களாக மாறினார்கள். சந்தர்ப்ப சூழ்நிலையால் மதம் மாறி சமயத்தை சைவ மக்களிடத்தில் புகுத்த முயற்சித்தார்கள். சைவசமயநெறிகளை வழுவாது கடைப்பிடித்தவர்களில் சிலர் தங்களின் தனிப்பட்ட முயற்சியால் சில இடங்களில் சைவசமய உயர்கல்லூரிகளை நிறுவினார்கள். அவ்வகையில் கனகரத்தின முதலியாரின் விடாமுயற்சியாலும், அவரது மகன் திரு செல்லப்பா அவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டதே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியாகும்.

அன்று கனகரத்தின முதலியாராலும் மகன் திருவாளர் செல்லப்பாவாலும் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி மக்களின் உதவியோடும் அங்கு கடமையாற்றிய ஆசிரியர்களின் விடாமுயற்சியாலும் படிப்படியாக வளர்ந்து இலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் கல்லூரிகளின் சமத்துவ நிலையில் விளங்குகின்றது. அக்கல்லூரி சுழிபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் தொல்புரம், பண்டைத்தரிப்பு, மூளாய் சித்தங்கேணி, வட்டுக்கோட்டைப் பகுதிகளுக்கு மத்தியில் இருந்தமையால் பல ஊர்களில் இருந்தும் பலமாணவர்கள் வருகை தந்து கல்வி கற்று பலதுறைகளில் மேன்மையோடு செயலாற்றி இருக்கிறார்கள் இப்பவும் இருந்து வருகிறார்கள். முதன் முதல் பாராளுமன்றம் சென்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மதிப்புக்குரிய திருவாளர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் பல்கலைக் கழகத்துக்குச் சென்று பட்டம் பெற்றவர் என்பது நினைவு கூர வேண்டிய ஒன்றாகும். மற்றும் இக்கல்லூரியில் கல்வி பயின்ற பலர் உலகில் பலநாடுகளில் வாழுகின்றார்கள். யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் சிறந்து விளங்கிய பல ஆசிரியர்களின் சேவை இக்கல்லூரிக்குக் கிடைக்கச் செய்தமை பலமாணவர்கள் சிறந்த கல்வியைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்று அக்கல்லூரியில் கல்விகற்றுப் பெரும்பயனை அடைந்த பலர் கனடாவில் வாழுகின்றார்கள்.

இத்தகைய கல்லூரியின் வளர்ச்சியில் அங்கு கல்வி பயின்ற நான் இக்காலகட்டத்தில் பேருதவி புரிய வேண்டும் என்ற பெருநோக்கோடு நூற்றுக்கு மேற்பட்டோரால் 12.2.1995ல் மிசிசிகாவிவிலுள்ள அப்பிள்வுட் கயிற்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட மன்றமே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி "பழைய மாணவர் சங்கமாகும். மன்றத்தின் ஆரம்பகாலச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுக் கடமைபுரியும் சந்தர்ப்பமேற்பட்டமைக்கு நன்றி உடையவனாக இருக்கின்றேன். ஆரம்ப காலத்தில் சலசலப்பாக மன்றம் விளங்காவிடினும் விக்ரேறியாக் கல்லூரியின் திருத்த வேலைகளுக்கும் தளபாடங்களுக்கும் அரசாங்க உதவியின்மையை மனதிலிருத்திப் பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து பணம் சேர்த்து அனுப்பியுள்ளமை போற்றக்கூடியது.

அக்கல்லூரியில் தொடர்ந்து ஏழுவருடங்கள் கல்வி கற்ற காலத்தில் நான் பெற்ற அனுபவமே அக்கல்லூரியின் தேவையை உணரச் செய்தது. அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் தமிழ்ப் பகுதி பாடசாலைகளுக்குரிய உதவிகள் குறைக்கப்பட்டன. அதனால் கல்லூரி சிறப்பாக நிகழ்ந்து எம் சமூகத்தவர்ளுக்கு பேருதவி செய்ய வேண்டுமாயின் பொது மக்களின் உதவி மிகவும் அவசியம். இன்றைய தாய் நாட்டின் நிலைமையில் அங்கு வாழ்வோர் உதவிபுரிவது மிகவுங்கஷடம். ஆகையால் புலம் பெயர்ந்து வந்து அயல் நாடுகளில் வாழும் எம்மைப் போன்றவர்கள்தான் உதவி செய்ய வேண்டும். அந்த வகையில் எம்மன்றம் செயற்படுவதையிட்டு மனமாரப் போற்றுகின்றேன்.

எமது பழைய மாணவர் சங்கத்தை மேலும் வளர்ப்பதோடு கனடாவில் வாழும் எல்லோரையும் இயன்றளவு சங்க உறுப்பினர்களாக்கி 24-6-2001 ஆண்டு மோனிங் சயிட் பார்க்கில் ஒன்று கூடிப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இப்போதைய நிர்வாகத்தவர்கள் முயற்சி செய்து மக்கள் மத்தியில் சுழிபுரம் விக்ரோறியாக கல்லூரியின் பேருமையையும் செயற்பாட்டையும் விளங்கச் செய்ய 125வது நிறைவு விழாவைக் கொண்டாடுவது சாலச்சிறந்தது. மேலும் இம்மன்றம் வளர்ந்து பயனுள்ளதாக இயங்க நாமெல்லோரும் இயன்ற பணியைப் புரிவோமாக.

கணபதிப்பிள்ளை சிவ அருள்ராசா
முன்னாள் செயலாளர்
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், கனடாக்கிளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Now offer you anew prestiigious luxury experience through.....*

# GOWRI'S Limousine Services

**CHAUFFEUR DRIVEN 120" MEGA STRETCH LIMO SEDANS**
**6,8,10 PASSENGER**
**MINIVAN AVAILABLE FOR TOURS AND SHUTTLE SERVICE**

**Any Occasion... or just to impress!**



Here are just a few ideas... SPECIAL RATES FOR OUR REGULAR CUSTOMERS

*CASINO TRIPS/NIGHTS OUT
*AIRPORT RECEPTION / PICK UP
*SOCIAL EVENTS / STAGE PARTIES
*ANNIVERSARIES / BIRTHDAYS...
*GRADUATIONS / PROMS
*WEDDINGS

***ADVANCE BOOKING RECOMMENDED***

**1862 ST. CLAIR AVE WEST, TORONTO, ONT M6N 1J8**
**CALL SIVA**
**(416) 657-1106 OR (416) 657-8017**

**Now available in Montreal (514) 685-6853**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை சந்தை

## *RETAIL & WHOLESSALE*

- மரக்கறிச் சந்தை
- இறைச்சிச் சந்தை
- மீன் சந்தை
- பலசரக்குச் சந்தை





**2800 Eglinton Ave. E., Unit #17**
**(McCowan & Eglinton)**
**Scarborough, Ontario.**

**(416) 261-1392**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆசிச் செய்தி

கல்விச் செல்வத்தால் பெருமை பெற்று விளங்கும் யாழ் குடாநாட்டிலே, வட்டுக் கோட்டைப் பிரதேசத்திலே கல்வி வளர்ச்சியிலே சாதனை பல ஈட்டிப் பெருவிருட்சமாக நிமிர்ந்து நிற்கிறது யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

இக் கல்லூரி தனது நூற்று இருபத்தைந்தாவது அகவையைக் கொண்டாடும் வேளையிலே, இதன் வித்துக்களாக நின்று புகழ்பரப்பி நிற்கும், கனடாவாழ் பழைய மாணவர்கள் ஒரு 'விழா மலர்' வெளியிட முனைந்துள்ளனர். இது பெரும் மகிழ்ச்சிக்குரியது.

பேராளர்கள் கனகரத்தினம் முதலியார், செல்லப்பா முதலியார் போன்றோரால் ஆரம்பிக்கப்பட்டு இன்று மனித சமுதாயத்தின் பல் துறை மேம்பாட்டுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் பெரிதும் பணிபுரிந்து வருகின்றது எமது 'விக்ரோறியாக் கல்லூரி' என்றால் அது மிகையாகாது.

இவ்வேளையில் இக் கல்லூரியின் தோற்றம், வளர்ச்சி, சேவை ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பெரியோர்களின் தன்னலமற்ற புனிதப் பணியை நாம் நன்றியுடன் நினைவு கூர வேண்டியவர்களாக உள்ளோம். அதிலும் இக் கலாசாலையின் ஆரம்ப கால அதிபர்களாக இருந்த அதிபர்கள், திரு வில். ஓ. பி. சிமோல், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் போன்றோரின் தன்னலமற்ற சேவையினாலேயே இன்று 125 வருடங்களை இக் கல்லூரி கண்டுள்ளது.

இக் கல்லூரியின் பழைய மாணவன், சுழிபுர மண்ணிற்குரியவன் என்ற பெருமையில், சிறப்பு விழா மலர்க் குழுவினரை வாழ்த்துகிறேன்.

இக் கல்லூரி மேலும் வளர்ச்சியுற்று பூரண வளங்களுள்ள கல்லூரியாக மிளிர இதயங் கனிந்த நல்லாசிகளைத் தெரிவிக்கிறேன்.

திரு. V. நாகராசா
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.
# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## J/VICTORIA COLLEGE, CHULIPURAM
## SCHOOL DEVELPOMENT SOCIETY

எமது பாடசாலையாகிய விக்டோரியாக் கல்லூரி இப்பொழுது 125 பெறுமதிமிக்க ஆண்டுகளை பல அதிபர்கள் தலைமையில், முன்னேற்றம் ஏற்படுத்தி விறு நடைபோட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இப் பாடசாலை, தனிப்பட்ட கனவானான திருவாளர் செல்லப்பா மனேஜர் அவர்களின் ஓய்வில்லா தன்னலமற்ற பொதுநோக்காலும் விவசாய குடும்பங்களின் நன்நோக்காலும் முன்வநத்து. இக் கைங்கரியம் தற்போது பலராலும் வியக்கத்தக்க, போற்றத்தக்க முறையில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இதற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் முன்னாள் அதிபர்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். தற்போதைய காலகட்டத்தில் பாடசாலையின் அபிவிருத்தி முன்னேற்றம், கல்வி ஊக்கம், நன்மதிப்பு என்பவற்றிற்குப் பாத்திரமாக உள்ளவர்கள் திருவாளர் கா. சந்திரபாலன் முன்னாள் அதிபர் மற்றும் தற்போதைய அதிபர் திருமதி அருந்தவச் செல்வி வேலுப்பிள்ளையுமாகும்.

தற்போது பாடசாலை ஏனைய முதற்தர பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது, முன்னேற்றகரமான நிலைக்கு வந்துள்ளமை புலப்படுகிறது. பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட சகல துறையிலும் பாரிய வளர்ச்சியடைந்துள்ளது. இதற்குப் பக்கபலமாக நின்று உழைத்தவர்கள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளுமாவர்.

விக்டோரியா மகாராணியின் பெயருக்கமையப் பாடசாலை ஒழுக்கத்தைப் பேணிக் காத்து வருகின்றது. இப்பாடசாலையில் அபிவிருத்திச் செயலாளர் என்ற நிலையில் எனது வாழ்த்துக்களை 125வது ஆண்டு நிறைவு விழரவையொட்டி மனமகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகின்றேன்.

ஞா. சிதம்பரநாதன் J.P

செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OATC

A Division of GemiTax Inc.

# OCEAN ACCOUNTING TAX CONSULTING

## ACCOUNTING SERVICES FOR PERSONAL & SMALL BUSINESS

## TAX PREPARER AND EFILE AGENT REFUNDS IN 7 TO 10 DAYS

* GST

**KUMAR THAMBIAPPAH**

* PAYROLL

* COMPUTER BOOK KEEPING

*CORPORATE TAX RETURN

***BUSINESS REGISTRATIONS FROM $99***
***INCORPORATIONS FROM $499***

TEL: (416) 285-6900 FAX: (416) 285-4545
Princess Plaza, 1682A Victoria Park Ave. Suite 5
(Between Lawrence & Eglinton) Scarborough, On., M1R 1P7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CRYSTAL AUTO COLLISION CENTRE LTD.

CAC


## COMPLETE BODY WORK & PAINTING


* WE ALSO DO INSUTANCE WORK
* WE SAVE YOUR DEDUCTABLE UP TO $300
* RENTAL CARS AND VAN AVAILABLE
* FREE ESTIMATE
* USE CARS FOR SALE
* ஏந்த நேரமும் குறைந்தது 20 ஜப்பான் கார்கள் இருப்பில் இருக்கும்.

**COMPLETE PAINT $399**

24 HOURS TOWING SERVICE AVAILABLE FREE FOR OUR CUSTOMER

**CONTACT APPAN OR NADA**




ACURA

TOYOTA

LEXUS

HONDA

TEL: (905) 804-0505 / (416) 993-8095 FAX: (905) 804-1551

3168 HURONTARIO STREET, #2, MISSISSAUGA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரனார்

சைவத்தையும், தமிழையும் போற்றி வளர்த்ததில் யாழ்ப்பாணப் பிரதேசம் தனக்கே உரிய ஒரு வரலாற்றினைக் கொண்டுள்ளது. அந்த வகையிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுக்குப் பிறகு சைவங்காத்தவருள் புலோலியூர் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களும் ஒருவராவார். புலோலி ஊர் சுப்பிரமணியம் வள்ளியம்மை தம்பதிகளின் தவப் புதல்வனாக சிவபாதசுந்தரனார் 17-1-1878ல் பிறந்தார். இவரது தந்தையார் சைவாசாரத்துடன், கல்வியறிவால் உயர்ந்திருந்ததுடன் வார்க்கடைச் சாமியாரின் திருவருளுக்கும் பாத்திரராகி விளங்கியவர். திரு. சு. சிவபாதசுந்தரனார் இளமைப் பராயத்தில் பார்பதிப்பிள்ளை என்றும் தனது மாமியாரிடத்தில் சமய அறிவினையும், நீதிக் கதைகளையும் கேட்டறிந்து நல்ல முறையில் கல்வி புகட்டப்பட்டு வளர்ந்தார்.

புலோலியிலிருந்த ஆங்கிலப் பாடசாலையில் தனது ஆரம்ப, இரண்டாந்தரக் கல்வியினை சிறப்பாக முடித்துக் கொண்ட பின்னர் தென்னிந்தியாவின் திருவனந்த புரத்திலிருந்த தனது சிறிய தந்தையார் பேராசிரியர் திரு. வ. கணபதிப்பிள்ளை என்பவரிடம் தனது மேற்படிப்பினைத் தொடர்வதற்காகச் சென்றடைந்தார். அங்கு சென்ற பின்னர் திருச்சிராப்பள்ளியிலுள்ள சென் யோசப் கல்லூரியில் சேர்ந்து தனது பட்டப் படிப்பினைத் தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழக பி.ஏ. பட்டதாரி பரீட்சையில் திறமைச் சித்தியெய்தினார். அங்கே படித்த காலத்தில் கணிதம் ஆங்கிலம் அளவையியல் ஆகியவற்றுடன் விஞ்ஞானம், வடமொழியினையும் கற்கத் தவறவில்லை.

தனது பட்டப்படிப்பினை முடித்துக் கொண்ட இவர் இலங்கை திரும்பி தனது சொந்த ஊரில் சில காலம் படிப்பித்ததின் பின்னர் திருகோணமலை சென்று சென் யோசப் கல்லூரியிலும் இரண்டு ஆண்டுகள் ஆசிரயராகக் கடமையாற்றினார். சேர் பொன் இராமனாதனின் அழைப்பையேற்ற இவர் யாழ்ப்பாணம் திரும்பி பரமேஸ்வராக் கல்லூரியின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். இவரின் கற்பிக்கும் திறனையும் நிர்வாக ஆற்றலையும் கண்ணுற்ற பல கல்லூரிகளின் முகாமையாளர்களும் இவரைத் தம் வசமாக்கிக் கொள்ள பெரிதும் முயன்றனர். இந்த வகையில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முகாமையாளர் திரு செல்லப்பா அவர்களின் வேண்டுதலை ஏற்று அங்கே பல ஆண்டுகள் அதிபராயிருந்து கடமையாற்றி அதனை முதல் தரமான கல்வி நிலையமாகத் திகழச் செய்தார். இன்றும் இக்கல்லூரி கல்வித் தராதரத்தில் சிறந்ததொன்றாக மிளிர்வதற்கு திரு சிவபாத சுந்தரனாரின் பங்களிப்பும் மிக முக்கியமானதொன்றாக அமைகின்றதெனலாம்.

பின்னர் இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் சிலகாலம் கடமையாற்றினார். ஆசிரியர் சேவை செய்து ஓய்வு பெற்ற பின்னரும் கூட சில ஆண்டுகள் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் கௌரவ மேற்பார்வையாளராக இருந்து பல வகுப்புகளுக்கும் பாடம் புகட்டி வந்துள்ளார்.

தன்னுடன் பணிபுரிந்த ஏனை ஆசிரியர்களை அன்பான முறையுடன் வழிநடாத்தி அவர்களின் சேவையினை மாணவர்கட்குச் சென்றடையச் செய்தமை இவரின் நிர்வாக ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாகும். மாணவர்கட்கு வெறுமானே படிப்பினை மட்டும் ஊட்டாது சிறந்த நற்பண்பு நற்பழக்கங்களையும் ஊட்டியதுடன் அவர்களை சிறந்த சமயப் பக்திமான்களாயும் ஆக்கத் தவறியவரில்லை. இவரிடம் கல்வி பயின்றவர்களில் பல நூற்றுக் கணக்கானோர் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் உயர்ந்த பதவிகளில் இருப்பதுடன் நாடு போற்றும் நன் மக்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தாம் கடமையாற்றிய கல்லூரிகளில் அதிபராக இருந்த பொழுது மாணவர்களின் பெற்றோர்களையும் பாடசாலையின் அபிவிருத்தியில் பங்கு கொள்ளச் செய்வதில் அக்கறையோடு பணியாற்றினார். பொருளாதார வசதி குறைந்த வறுமைநிலையில் வாழ்ந்த மாணவர்களைக் கல்வியால் பாதிக்கப்படாத வகையில் பல உதவிகளை புரிந்து அவர்களையும் சிறந்த கல்விமான்களாக திகழச் செய்துள்ளார். தான் கடமையாற்றிய கல்லூரிகளின் முன்னேற்றத்திற்காக இவர் புத்தகங்களை பொக்கிஷமாக மதித்து அவற்றைச் சேகரித்து சிறந்த நூல் நிலையங்களையும் அமைத்துக் கொடுத்தார். தாம் பணியாற்றிய கல்லூரிகள் அனைத்திலும் ஆலயம் அமைத்து காலை வழிபாட்டுடன் வகுப்புக்களை ஆரம்பிக்கும் மரபினையும் தொடக்கி வைத்தார். கல்விபயிலும் பிள்ளைகட்கு இளமையிலேயே தினமும் காலையில் நீராடி தூய சிந்தையுடன் இறைவழிபாட்டினைச் செய்வது அவசியமெனப் போதித்தார். இவரினால் மாணவருக்கான சைவபோதம் 1ம் பாகம், 2ம் பாகம் சைவ சித்தாந்தக் கட்டுரைகள், சிவஞானபோதக் கருத்து விளக்கங்களும் வெளிப்பட்டனவாகும். திருவருட் பயனுக்கும் சிறந்த விளக்க உரையை எழுதியுள்ளார்.

முருகப் பெருமானின் சிறந்த பக்தனாக விளங்கிய இவர் கந்தபுராணம் சம்பந்தமாக பலகட்டுரைகளும், விரிவுரைகளும் எழுதியுள்ளார். சைவ சித்தாந்தத்தை தமிழிலும், ஆங்கிலத்திலும் பயிலத்தக்க வகையில் அது சம்பந்தமான பல நூல்களை எழுதி குறைந்த விலைக்கே விற்பனை செய்தார். சிவஞான போதம் என்னும் சைவ சித்தாந்த நூலை ஆங்கிலத்தில் சற்றும் மரபு நெறி பிசகாமல் விளக்கி எழுதியுள்ளார். இதன் மூலம் ஈழத்தவரும், தமிழ் நாட்டினரும் மட்டுமன்றி வெளிநாட்டு ஆங்கில அறிவு படைத்த அனைவரும் சைவ சமயதத்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளச் செய்தார். சைவத்தின் மகத்துவம் என்னும் நூலையும் ஆங்கிலத்திலே எழுதி உள்ளார். இந்து சமயத்தில் சைவத்துறை என்னும் ஆங்கில நூலொன்று இலண்டனில் "அலன் அன் அண்வின்" என்னும் நிறுவனத்தாரால் வெளியிடப்பெற்றது. இந்த நூலின் மறுபதிப்பினை பல ஆண்டுகளின் முன்னர் மலேசியா அருள் நெறித் திருக் கூட்டத்தினர் கோலாலம்பூரில் வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இச்சைவப் பெரியாரின் எழுத்தாற்றலையும், நூலாசிரியத்தகைமையையும் ஈழத்தவரன்றி தமிழ் நாட்டு அறிஞர்களும் நன்கு போற்றி கௌரவித்துள்ளனர். இந்த வகையில் திருக் கைலாய பரம்பரை தருமபுர ஆதீனம் இவரின் சைவ அபிமானத்தைக் கண்ணுற்று இவரைப் பாராட்டியுதவிகள் பல புரிந்துள்ளது.

இவர் சமய நூல்கள் மட்டுமன்றி தாம் படித்த கல்வி அறிவாற்றலைக் கொண்டு தர்க்கம் அளவையியல், உளவியல், மனோதத்துவம் கற்றலும் கற்பித்தலும் என கல்வியியல் சம்பந்தமான நூலை எழுதியுள்ளார். இதனால் கல்வியுலகு பெருநன்மையெய்தியது. இலங்கைக் கல்வித்திணைக்களமும் கல்வியமைச்சும் இவர்பெருமையை வியந்து பாராட்டியுள்ளன. இவர் அகநூல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அளவைநூல், படிப்பித்தலின் முறைகளும் விதிகளும், திருக்குறள்மணிகள், திருவாசக மணிகள், தருக்கநூல், தருக்க நூற்சாரம் என்பன போன்ற பலகல்வி சம்பந்தப்பட்ட நூல்களை எழுதியுள்ளார். சைவ சமயம் சம்பந்தமாக சைவசமய சாரம் சைவ சமயத்தின் பெருமை சைவக்கிரியை விளக்கம், திருப்பெருவடிவம், கந்த புராண விளக்கம், சில பெருவடிவம், கந்த புராண விளக்கம், சிவபெருமான் விரதம், சைவநாயன்மார்கள் சந்தனாசாரியார் பற்றிய பலநூல்களையும் எழுதியுள்ளார்.

சைவசமயப்பற்றுமிகு பெரியார் சைவாசார சீலராய் வாழ்ந்து சைவத்தின் முதுகெலும்பாய்த்திகழ்ந்தவர் எனலாம். சைவ சமயத்தைப் பற்றி தர்க்க ரீதியாகப்பேசியவர், எழுதியவர். தாம் எழுதிய நூல்னை சைவசமயம் வளர்க்கும் நிறுவனங்களாகிய யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்கும், கொழும்பு விவேகானந்த சபைக்குமே வெளியிடும் உரிமையைக் கையளித்தமையிலிருந்து இவர் எவ்வளவு சைவ சமயப்பற்றானவர் என்தை நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் தலைவராக 1932-33ம் ஆண்டுகளின் பதவிவகித்து பெரும் பணியாற்றியுள்ளார். தம் வாழ்நாளில் நீண்ட காலம் யாழ் சைவ பரிபாலன சபையோடும் நெருங்கிய உறவு பூண்டு சபையின் வழியே தம்முடைய அரும் பெரும் கருத்துக்களைப் பரப்பி வந்தார். இச் சபை இன்னும் பெரியார் காட்டிய வழியிலே அவர்காட்டிய விழுமிய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து சென்று கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தை புணருத்தாரணம் செய்வதில் ஓயாதுழைத்து திருப்பணிக்கு வேண்டிய பொருளையும் சேகரித்துக் கொடுத்து அருந்தொண்டாற்றியுள்ளார். திருக்கேதீஸ்வரத்திலுள்ள நடராசப் பெருமானையும் இவரே வடிப்பித்துக் கொடுத்துள்ளார். திருக்கேதீஸ்வரத்தில் திரு ஞானசம்பந்தர் மடத்தையும் ஆரம்பித்து தொண்டுகள் செய்யுமாறு தன் நண்பர்களையும், மாணவர்களையும் தூண்டி துணையாக நின்றார். இப் பெரியார் சமய வளர்ச்சியென்பது வெறும் சமயச் சடங்குகள் மட்டுமல்ல மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்வும் ஆத்மீக சிந்தனையும், வளர வேண்டுமென்பதில் அக்கறைகாட்டினார். பெரியாரின் வழி தனிவழி. மக்களின் வழியில் சென்று அவர்களின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து அவர்களுக்கு ஆன்மீக சிந்தனையைப் புகட்டினார்.

"சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை" என்னும் திருமூலர் திருவாக்குக்கமைய சிவபர தத்துவத்தை மக்களிடையே பரப்பி வந்த பெரியாராவர். முருகன் பெருமான் மீது கொண்ட அளவற்ற காதலால் அவருக்கு தொண்டு செய்தலையே தம் வாழ்வின் பயனெனக் கருதி பொலிகண்டி கந்தவனக் கடவையின் வடக்கு வீதியிலே குடிசை அமைத்து முருகப் பெருமானுக்கு முப்பொழுதும் தொண்டு செய்து வணங்கி தம் பிற்காலத்தை மிகவும் அமைதியாகக் கழித்தார். இவ்வாறு தொண்டு செய்து வாழ்ந்த பெரியார் அவர்கள் 14-8-1953 திகதியன்று இறைவனடியை எய்தினார். இவரின் நினைவு என்றும் நிலைத்து நிலவுவதாக.

ச. திருஞானசம்பந்தக் குருக்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விக்ரோறியா கல்லூரி மாணவ முதல்வர் மன்றத் தலைவரின் செய்தி

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடா கிளையினர் வெளியிடும் சஞ்சிகைக்கு மாணவர்கள் சார்பில் இச்செய்தியை அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 125 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இங்கு படித்த மாணவர்கள் பலர் இலங்கையில் மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலும் உயர் தொழில் புரிந்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் கனடா நாட்டில் வாழும் எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்று கூடி பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கி அதன் ஊடாக கல்லூரிக்கு பணரீதியாக ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் பல லட்சம் ரூபாவை சேமிப்புக் கணக்கு வைப்பில் இட்டு அதனால் வரும் வருமானத்தைக் கொண்டு நிறைவேற்றிவருகின்றனர். அதே வேளை 125வது ஆண்டு விழாவை முன்னிட்டு எமது கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை விஸ்த்தரிப்பதற்கு மேலதிகமாக காணியைப் பெற்றுத்தருவதற்கும் முயற்சி செய்து வருகின்றார்கள். இவ்வாறான சேவைகளால் மாணவர்களாகிய எமக்கு மிகவும் உச்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன் தொடர்ந்தும் தங்கள் சேவை நீடிக்க வேண்டுமென்று எம் கல்லூரியில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் நடேசப்பெருமானின் பாதாரவிந்தங்களை வேண்டுகின்றேன்.

இச் சஞ்சிகையைச் சிறப்புடன் வெளியிட முயற்சி எடுத்த சிந்தனை வள்ளல்கள் அனைவருக்கும் மாணவர்கள் சார்பாக பாராட்டுக்களையும் நன்றியையும் மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

T. ரவிமோகன்
தலைவர்
மாணவர் முதல்வர் மன்றம்



**CHEMISTRY PRACTICAL CLASS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS FROM*

**LINGAM NADARAJA**
**R.V.P**
**PRIMERICA**

**PAGER: (416) 812- 2299**
**TEL: (416) 425-7376**

**You Can Save Thousands Of Dollars Per Year On:**

• LARGE FORMAT DIGITAL COLOUR UP TO 80" WIDE
• MOUNTING • LAMINATING • PHOTOCOPYING
•COLOUR COPYING • SCANNING • ETC.

REPORTS • MANUALS • NEWSLETTERS • PRODUCT SHEETS • LETTERHEAD & ENVELOPES • LEGAL DOCUMENTS • BUSINESS CARDS • BOOKLETS • INVOICES • FORMS • LABELS • FLYERS • ETC. •

• SIGNS • POSTERS • BANNERS • P.O.P. MATERIALS • TRADE SHOW DISPLAYS • WINDOW GRAPHICS • TRANSIT SHELTERS • FLEET GRAPHICS • EVENT SIGNAGE • BILLBOARDS • BACKDROPS • MURALS • ETC.

**Call M C Reproductions for Quality, Service & Pricing Second-to-None:**

MISSISSAUGA: 905-624-5716, 1-800-361-1618
MARKHAM: 905-470-0200 or 416-756-4129
TORONTO: 416-932-2014
LONDON: 519-858-9666

ASK ABOUT OUR FREE PICK-UP & DELIVERY SERVICE



www.mcreproductions.com

M C

Since/Depuis1978
The Trusted Name
for **ALL** your **Printing & Graphic** needs
**M C Reproductions Inc.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS FROM*

# GNANAMS STUDIOS

## 416 750 8118

DIGITAL DIGITAL DIGITAL

12 X 18 PRINTS IN 30 MINS
24 Exp.Dev. &Print $ 5.87 Only
Write your Neg. on CD.

**2381 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2M5**

*WITH THE BEST COMPLIMENTS FROM*

# MANCHULAA FASHION

Textiles, Jewellery, Fancy, Utensils etc...

மலிவின் மறு பெயர் **மஞ்சுளா பஷன்**



**Tel: (416) 297-9875,** **Fax: (416)297-7595**

5635 Finch Ave., East.Unit #3, Scarborough, Ont. M1B 5K9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது கல்லூரி ஆசிரியர் குழாம்

| | | |
|---|---|---|
| 01. | திருமதி. அ. வேலுப்பிள்ளை | B.Sc. DIP. IN. ED அதிபர் |
| 02. | திரு. வி. சண்முகநாதன் | B.A.DIP.IN.ED, SLTS-1 பிரதி அதிபர் |
| 03. | திரு. க. சிவதாசன் | பொது பயிற்றப்பட்டவர் SLTS-1<br>பகுதித்தலைவர் 6 - 8 |
| 04. | திரு. வ. மு. இராஜேந்திரன் | தொ.மு. பயிற்றப்பட்டவர் SLTS-1<br>பாடஇணைப்பாளர் (தொழில்நுட்பம்) |
| 05. | திரு. ச. திருக்குமார் | கணிதம் பயிற்றப்பட்டவர் SLTS-1<br>பகுதித் தலைவர் 8 - 11 |
| 06. | திருமதி. செ. கருணானந்தன் | B.A. பாட இணைப்பாளர் (தமிழ்) |
| 07. | திரு. த. குணத்திலகம் | வனைதல் பயிற்றப்பட்டவர் SLTS-1 |
| 08. | திருமதி. கா. நே. சண்முகநாதன் | விவசாயம் பயிற்றப்பட்டவர் |
| 09. | திருமதி. இ. தவநாயகம் | B.A.DIP.IN.ED |
| 10. | திருமதி. சு. தங்கராஜா | B.COM.DIP.IN.ED வர்த்தக பாட இணைப்பாளர் |
| 11. | திருமதி. அ. சற்குணசிங்கம் | B.A.DIP.IN.ED, SLTS-1 பகுதித் தலைவர் |
| 12. | திரு. இ. க. கிருஸ்ணமூர்த்தி | கட்டிட நிர்மானம் பயிற்றப்பட்டவர் |
| 13. | திருமதி. க. குலநாயகம் | விஞ்ஞானம் பயிற்றப்பட்டவர் விஞ்ஞான பாடஇணைப்பாளர் |
| 14. | திரு. செ. ஆனந்தகுமார் | ஆங்கிலம் பயிற்றப்பட்டவர் |
| 15. | திருமதி. செ. தேவராஜா | ஆங்கிலம் பயிற்றப்பட்டவர், ஆங்கில பாட இணைப்பாளர் |
| 16. | திருமதி. ல. தர்மதேவன் | சமயம் பயிற்றப்பட்டவர், சமய பாட இணைப்பாளர் |
| 17. | திருமதி. செ. ரங்கன் | விஞ்ஞானம் பயிற்றப்பட்டவர் |
| 18. | திரு. மா. ஞானசேகரம் | B.A. DIP.IN. ED கணித பாட இணைப்பாளர் |
| 19. | திருமதி. த. நேசராணி | B.Sc. DIP.IN. ED |
| 20. | திருமதி. ம. நேசமலர் | B.A. DIP.IN. ED |
| 21. | திரு. அ. பாலசுப்பிரமணியம் | கணனி போதனாசிரியர் |
| 22. | திரு. இ. கைலைவாசன் | B.COM.DIP.IN.ED |
| 23. | திருமதி. ம. ஜெயசோதி | B.A. DIP.IN. ED |
| 24. | திருமதி. ம. மகேஸ்வரன் | B.A. DIP.IN. ED |
| 25. | திரு. தி. சிவயோகலிங்கம் | B.Sc. DIP.IN. ED |
| 26. | திரு. நா. திருக்கிமாரன் | B.Sc. DIP.IN. ED |
| 27. | திரு. வி. நகுலேஸ்வரன் | B.Sc. |
| 28. | திருமதி. கோ. தேவசுதன் | B.A. சமூகக்கல்வி பட இணைப்பாளர் |
| 29. | செல்வி. சு. சுந்தரலிங்கம் | B.Sc. |
| 30. | திருமதி சு. சிறிதேவி | டிப்பிளோமா நடனம், அழகியல் பாட இணைப்பாளர் |
| 31. | திருமதி. நி. பிரணரூபன் | B.Sc. |
| 32. | செல்வி. த. பங்கயற்செல்வி | டிப்பிளோமா சங்கீதம் |
| 33. | திரு. மா. கருணாநிதி | B.Sc. |
| 34. | திரு. வே. கார்த்திகேயன் | B.Sc. (AGRI) |
| 35. | செல்வி. ஆ. றோகினி | B.BA. |
| 36. | திருமதி. ப. குமரகுரு | டிப்பிளோமா சங்கீதம. DIP.IN.ED |
| 37. | செல்வி. த. லோகநாயகி | மனையியல் பயிற்றப்பட்டவர் |
| 38. | செல்வி. பூ. ஜெயமலர் | B.A. (Hons) Dip.in. Ed. |
| 39. | செல்வி. ந. ஜெயகௌரி | உடற்கல்வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர்

| | |
|---|---|
| திருமதி. லோ. மதிலோஜினி | டிப்பிளோமா சங்கீதம் |

## தற்காலிக ஆசிரியர்கள்

| | |
|---|---|
| திருமதி. N. சிவராஜன் | (உடற்கல்வி) |
| திரு. K. தர்மபாலன் | (அளவையியலும் விஞ்ஞானமும்) |
| திரு. A. A. றெஜினோல்ட் | (நாடகமும் அரங்கியலும்) |
| திரு. S. அருள்ரமேஸ் | (சித்திரம்) |

## கல்விசாரா அலுவலர்

| | |
|---|---|
| செல்வி. T. யோகராணி | முகாமைத்துவ உதவியாளர் |
| திரு. T. சுதாமாறன் | அலுவலகப்பணியாளர் |
| திரு. T. பகீர்தன் | ஆய்வுகூட உதவியாளர் |
| திரு. A. புஸ்பராஜன் | தோட்டத்தொழிலாளி |
| திரு. P. சிவம் | சுகாதாரத்தொழிலாளி |
| திரு. V. பாலசுப்பிரமணியம் | காவலாளி |
| திரு. இ. கணநாதன் | நிவாரணக் காவலாளி (தற்காலிகம்) |
| செல்வி. V. சுசிகலா | நூலகப்பணியாளர் (அமைய) |
| செல்வி. N. லலிதாதேவி | தட்டெழுத்தாளர் (தற்காலிகம்) |

## ஆசிரியர்கள்


எமது கல்லூரியில் 39 நிரந்தர ஆசிரியர்களும், 4 தற்காலிக ஆசிரியர்களும் கற்பிக்கின்றார்கள். தென்மராட்சிக் கல்வி வலயத்திலிருந்து 1 ஆசிரியரும் இணைக்கப்பட்டுள்ளார்.

## மாணவர் விபரம் 2001

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6 - 8 | 170 | 140 | 310 |
| 9 - 11 | 204 | 221 | 425 |
| 12 - 13 | 168 | 197 | 365 |
| | ---- | ---- | ---- |
| | 542 | 558 | 1100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்பத்திற்குரிய விக்ரோரியாக் கல்லூரி



இலங்கையின் வட மாகாணத்தின் தலைநகர் எனக் கருதப்படும் யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கல்லூரிகள் என மதிக்கப்படும் கல்வி நிலையங்கள் பல உள்ளன. இவற்றுள் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியும் ஒன்று என்று கூறினால் அதனை மறுத்துக் கூறுபவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். ஈழத்தமிழர் அரசியலில் முதலிடத்தில் வைத்து மதிக்கப்படவேண்டிய அமரர் உயர்திரு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கூட விக்ரோரியாக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நான் அக்கல்லூரியில் சில வருடங்கள் மட்டுமே கல்வி கற்றிருந்தாலும் அந்த குறுகிய காலப்பகுதியை எனது வாழ்நாளில் மறக்க முடியாது என்பது தீவிரமான உண்மையாகும். கல்வியில் சிறந்து விளங்கும் யாழ் மண்ணில் எனது பாடசாலை வாழ்க்கையின் கதவு என வர்ணிக்கப்படக் கூடிய சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி யாழ்ப்பாணக்கல்வியின் தரத்தையும் சிறப்பையும் எனக்கு கற்றுத் தந்த வழிகாட்டி என்று கூறுவதிலும் நான் பெருமை அடைகின்றேன்.

இலங்கையின் மலையகத்தின் நகர் ஒன்றில் பிறந்த நான் அங்கிருந்து எனது பெற்றோர் யாழ்ப்பாணத்தில் தமது வாழ்வைத்தொடர வந்தபோது சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி என்னை ஏற்றுக்கொண்டது. அங்கு யாழ்ப்பாணக் கல்வியின் தரத்தை அறிந்து கொண்டு அதற்கேற்ப கற்றுக்கொள்வதற்கு என்னை தயார்படுத்தியது விக்ரோரியாக் கல்லூரி என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்

அப்போது அங்கு கல்வி கற்பித்த பல ஆசிரிய ஆசிரியைகள் சிறப்பான தகைமைகளையும் மட்டுமல்ல நல்ல பண்புகளையும் கொண்டிருந்தார்கள்.தங்கள் பாடசாலை நேரங்கள் தவிர்ந்த நேரங்களில் கூட விசேட வகுப்புக்களுக்கு எம்மை அழைத்து கற்பித்தலில் தமக்கு உள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டினார்கள் அந்த உயர்ந்த பண்பாளர்கள் குறிப்பாக வடமாகாண ஆசிரியர் சங்கம் நடத்திய 8ம் தர பரீட்சைக்காக மாணவர்களை அந்த ஆசிரியர்கள் தயார்படுத்தியதை இன்னும் என்னால் மறக்க முடியாமல் உள்ளது.

கல்வியில் மட்டுமல்ல விளையாட்டு மற்றும் கலை கலாச்சார துறைகளிலும் விக்ரோரியாக் கல்லூரியின் அப்போதைய அதிபரும் ஆசிரிய ஆசிரியைகளும் காட்டிய ஆர்வம் தற்போது உலகில் பல நாடுகளிலும் அக் கல்லூரி பழைய மாணவர்களும் மாணவிகளும் கலை கலாச்சார முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு இயங்கிவருவதை பார்க்கும்போது நன்கு உணரக் கூடியதாக உள்ளது.

இந்தக் கல்லூரி பல வழிகளிலும் உயர்ந்து நின்றது என்பதை விளக்க்க கூடிய வகையில் அங்கு பல விசேட அம்சங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன என்பது இங்கு கவனிக்கப்படவேண்டியதாகும் . உதாரணமாக கடெற் என்று அழைக்கப்படும் குழுவொன்றை வருடா வருடம் தெரிவு செய்து அந்தக் குழுவை இலங்கையின் பல முன்னணிப்பாடசாலைகளோடு இணைய வைத்து விக்ரோரியாக் கல்லூரியின் பெருமையையும் அதன் மாணவர்களின் திறமையையும் முழு இலங்கையுமே அறியக்கூடியதாக இருந்த நாட்களில் நான் விக்ரோரியாக் கல்லூரியின் மாணவனாக இருந்தேன் என்பதையும் அதன் முலம் நானும் மகிழ்ச்சியடைந்தேன் என்பதையும் கனடாவில் வாழும் விக்ரோரியாக் கல்லூரி பழைய மாணவர்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். இக்கல்லூரியானது எனக்கு மட்டுமல்ல பலரது விருப்பத்திற்கும் உரியது என்பதை நான் உணர்கின்றேன்.

**ஆர். என். லோகேந்திரலிங்கம்**
**பிரதம ஆசிரியர்**
**உதயன் பத்திரிகை (கனடா)**

*WITH THE BEST COMPLIMENTS FROM*

**சூரியாஸ்**
**SOORIYAS**
**Gift & Textiles**

***Gifts, Textiles***
***Children's Wear***
***Video, CD'S***
***& much more . .***

1235 ELLESMERE ROAD
என் தந்தையார் "Early to Bed Early to rise make a man Health Wealth and wise" என்ற வாசகத்தையும் அடிக்கடி கூறுவார். கூறுவதோடுமட்டும் நில்லாது எம்மையும் அதிகாலை 4 மணிக்கு எழுப்பி படிக்க விடுவார், மாலையில் 6 மணியிலிருந்து 9 மணிவரை. நாம் விளையாடப்போக ஒரு போதும் அனுமதிக்க
மாட்டார். வீட்டு வேலைகள் வயல் வேலை எல்லாம் நிறையச் செய்ய வேண்டும்.


எமது தந்தையாரின் உயர்ந்த கொள்ளைகளினால் என் சகோதரி வைத்தியராகவும் எனது சகோதரன் பொறியியலாளராகவும் வரக்கூடியதாக இருந்தது.

எமது தந்தையார் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் எட்டு ஆண்டுகள் (1958-66) கல்வி கற்பித்தவர். இதனால் அப்பகுதி மக்கள் பலரையும் அவருக்குத் தெரியும். சுழிபுரம் பகுதி மக்கள் அவர் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருப்பதை நான் காணக்கூடியதாக உள்ளது. நான் அவரின் மகன் என்பதில் மிகுந்த பெருமையடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய இடத்தில் நவீன வசதிகளுடன்





**அனைத்து வயதினரிக்குமான பல், வாய் சம்பந்தமான வியாதிகளுக்கும் சிகிச்சைகள் செய்யப்படும்**


**பிரபல பல் வைத்திய நிபுணர்**
**டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்**

**Braces**







கிளிப் போடுதல்




* முரசு கரைதலை நிறுத்துதல்
* பல் வேர்களை அடைத்தல்
* அழகுபடுத்தும் பல் சிகிச்சை
* முதியோர் பல் பராமரிப்பு
* கிளிப் போடுதல்
* பற்களை வெண்மையாக்கல்
* ஞானப்பல் எடுத்தல்


* கட்டுப்பற்கள்
* நிரந்தரமான செயற்கைப்பற்கள்
* பவுண்பல் கட்டுதல்
* குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
* வாய் துர்நாற்றம் அகற்றுதல்
* பல் அடைத்தல்
* இன்னும் பல.....




***416-750-9969***
***2191 Warden Ave., Suite 300***
***(Warden & Shephard***
***Scarborough, ON. M1T 3N9***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROYAL LEPAGE



ஒன்றல்ல, இரண்டல்ல, பன்னிரண்டு வருடங்கள்
இத்துறையில் முன்னணியில்
அனுபவம், திறமை, பொறுமையும் கூட.

**உங்களுக்கென்றோர் இல்லம்**
**அமைத்திட அழையுங்கள்**

*Karu Kandiah*
*Associate Broker*

**கரு கந்தையா**

**Office: 416-284-4751 Car: 416-616-7278**
**4218 Lawrence Ave. East, WestHill, Ontario**

# ELANE CINEMAS

2800 EGLINTON AVENUE EAST 416-266-3456



**எலெய்ன் சினிமாஸ்**

**SHOW TIME: 416-266-3456 HOT LINE: 416-703-8020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Pure Gold Means*

# SURYA YEWELLERS



- சூர்யா ஜுவலர்ஸ்,
- வைரத் தாலிக்கொடிகள்,
- கல் அட்டியல்கள்,
- முத்துச் சங்கிலி, பதக்கம், வளையல்கள்,
- விதம் விதமான தோடுகள்,
- ஓம் அம்மன் பென்ரன்கள், கைச்சங்கிலிகள்,
- வைரக்கற்கள் (பவளம், முத்து)
- மாணிக்கக் கற்கள்,
- கெட்டிப்பூரான் அட்டியல்கள்,
- முதல்வன் செயின்கள்,
- படையப்பா நெக்லஸ்கள்.......

உங்கள் மனம் கவர்ந்த சகலவிதமான தங்க நகைகளை சிறந்த கை வேலைப்பாட்டுடன் 22 கரட் தங்கத்தில் வடிவமைத்து எங்கும் பெறமுடியாத மலிவு விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

**1495 Gerrard St. East, Toronto, Ontario.**
**Tel: (416) 406-3373 Fax: (416) 406-6628 Toll Free: 1-877-446-9997**



# APP4NET Inc.

Computer Education&Training Services

**A+**
- Hardware (core)
- Operating System (Dos, Win9x, Win NT, Win2000)
- Assembling
- Trouble Shooting

**MCSE**
- Server
- Professional
- Active Directory
- Network Infrastructure
- Directory Service Design
- Security Design
- Win2k Accelerated

**CISCO**
- CCNA
- CCNP

**Web Developing**
- Introduction to Internet And Web Development
- HTML/DHTML
- Cascading Style Sheet
- Java Script
- Flash
- Adobe

- ORACLE DEVELOPER
  Programming with SQL
  PL/SQL Oracle Forms and Reports
- JAVA 2 Programming
  For Sun-Java Certification
- Visual Basic 6.0
  For M.C.P Certification

**PROGRAMMING**
- C, C+
- Java 1&2
- Visual Basic 6.0

**KIDS Computer**
- Win 9x/Winme
- Keyboarding
- Ms Office 2000
- HTML

**Introduction to Computer**
- WIN9X/Me
- Internet-mail
- Keyboarding

FREE!FREE!!

☎ : (416) 285-7775 OR : (416) 833-4141
: 1658 Victoria Park suit # 5 (2nd Floor)
(Victoria Park & Lawrence) @ PRINCESS PLAZA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



125 வருட காலமாக சைவத்தையும் பல்கலைகளையும் வளர்த்து புகழ் பூத்த சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் எனது பசுமையான நினைவுகளைப் பதிவு செய்வதில் பெருமையடைகிறேன். முதலியார் செல்லப்பா இப்பாடசாலையை நிறுவியது மட்டுமின்றி அதற்கு **professor Small** என்ற ஆங்கிலேயரையும் அதிபராக நியமித்திருந்தார். அதன் பயனாகக் கல்லூரி அதிபரின் சான்றிதழுடன் (**Character Certificate**) மலேசியா சென்றோருக்கு அரச சேவையில் வேலை வாய்ப்பு கிட்டியது. இதுவே ஒரு காலகட்டத்தில் சுழிபுரம், தொல்புரம், மூளாய், பண்ணாகம் ஆகிய கிராமங்களில் மலாயன் ஓய்வூதியம் பெறுபவர்கள் அதிகம் இருக்கக் காரணமாக இருந்தது. இவர்களே கிழக்காசியாவிலேயே முதன்மை பெற்ற மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை ஸ்தாபிப்பதிலும் நிர்வகிப்பதிலும் பெரும் பங்காற்றினார்கள். ஒரு கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை காலப் போக்கில் யாழ்மாவட்டத்திற்கே பெரும் சேவையாற்றியது.

1945ம் ஆண்டு ஆவணி மாதம் ஒரு திங்கட்கிழமை நானும் எனது சகோதரன் சற்குணநாதனும் விக்டோரியாக் கல்லூரி அதிபர் காரியாலயத்துள் நுழைந்தோம். அதிபர் திரு **P.G.** தம்பதியப்பா எம்மைப் பாடசாலையில் அனுமதித்தார் அப்பொழுது கல்லூரி ஒரு தனியார் பாடசாலையாகத் திகழ்ந்தது. அதன் முகாமையாளராக மூளாயைச் சேர்ந்த சுழிபுரம் தபால் அதிபர் திரு **R**. தம்பையா விளங்கினார். சுழிபுரம் உபதபாற் கந்தோரும் கல்லூரியின் ஒரு பகுதியிலேயே இயங்கியது. தனியார் ஒருவர் இப்பெரிய பாடசாலையை நிர்வகிப்பதில் சிரமங்கள் தோன்றின. காரணம் 1945ம் ஆண்டு அக்டோபர் முதல் அன்றைய கல்வி மந்திரி திரு **C.W.W.** கன்னங்கராவால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வித்திட்டம் அமுலுக்கு வந்தது. அதனால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு வந்த பாடசாலைக் கட்டணம் (**School fees**) நிறுத்தப்பட்டது. இவ்வேளை அரசாங்கமும் அப்பகுதியில் ஒரு பாடசாலையை விலைக்கு வாங்க முயற்சித்துக் கொண்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, முகாமையாளர் சுயநலம் கருதாது, பாடசாலையை அரசாங்கத்திற்கு விற்று விட்டார். இதன் பலனாகவே அன்றைய வட்டுக்கோட்டைப் பிரதி நிதியும் (**M.P.**) கல்விக்குப் பொறுப்பான பாராளுமன்றக் காரியதரிசியுமாகிய திரு **K**. கனகரத்தினம் ஐந்து இலட்சம் ரூபாவை பாடசாலையின் அபிவிருத்திக்காக ஒதுக்கியிருந்தார். அதைக் கொண்டே பாரிய இரண்டு மாடிக் கட்டிடமும், ஆய்வு கூடங்களும் , நீர் வழங்கல் வசதிகளும் (**pipe water - supply**) ஏற்படுத்தப்பட்டன.

இனி அக்காலப்பகுதியில் மாணவர்களின் நிலையை ஆராய்வோம், மாணவர்களுக்கு சீருடை (**Uniform**) என்பது கிடையாது. வேட்டியுடனும் மாணவர்கள் பாடசாலைக்கு வருவார்கள். காலணி (**shoes or sandals**) என்ற பேச்சுக்கே இடமில்லை. பல மைல் தூரத்தில் இருந்து வந்தவர்களும் கால் நடைதான். புத்தகங்களுக்கு பை (**school bags**) இருக்கவில்லை. புத்தகங்களை ஒரு பட்டியால் (**belt**) கட்டித் தோளில் சுமந்தே பாடசாலை செல்வார்கள். ஊற்றுப் பேனாக்கள் மிகச் சிலரிடமே இருந்தன. **Ball point** பேனாக்கள் அப்பொழுது அறிமுகமாகவில்லை. டியூசன் (**Tution**) என்றோ, தனியார் கல்வி நிறுவனங்கள் என்றோ ஒன்றும் இருக்கவில்லை. மாணவர்கள் பாடசாலைப் போதனையிலேயே பூரணமாகத் தங்கியிருந்தார்கள்.

இக்காலப் பகுதியில் கற்ற இரு மாணவர்களைப் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒருவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித்தலைவர் பதவி வகித்த ஒரேயொரு தமிழரான திரு அ. அமிர்தலிங்கம். இவரே இக்கல்லூரியின் முதலாவது பட்டதாரி என்ற பெருமையைத் தட்டிக் கொண்டவர். மற்றையவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் மந்திரிப்பதவி வகித்த திரு செ. குமாரசூரியர்.

இக்காலப் பகுதியில் கல்வி போதித்த ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகும். அன்றைய பாடத்திட்டத்தில் ஆங்கிலத்திற்கு ஆங்கிலப் பாஷை (**Eng. Lang.**) ஆங்கில இலக்கியம் என இரு பாடங்கள் இருந்தன. எனது ஆங்கில ஆசிரியரான திரு **N**. சிவஞானம் அவர்களைப் பற்றி சொல்லியேயாக வேண்டும். அவர் சனிக்கிழமைகளில் விசேட வகுப்புகளை நடத்துவார். சனி நீராடு என்பதற்கிணங்க சனி தோறும் எண்ணை முழுக்கைத் தவறவிடாத போதிலும், சரியாகப் பிற்பகல் 2:30 மணிக்கு வகுப்பறையில் இருப்பார்.

எனது ஆங்கில இலக்கிய ஆசிரியர் திரு **S.M.** ஆசைப்பிள்ளையாவார். புரியாத ஆங்கில இலக்கியத்தை இரசித்து சுவைக்கும் வகையில் இலகுவில் புரியவைப்பார். பிற்காலத்தில் நான் ஒரு ஆங்கில ஆசிரியராகத் திகழ்வதற்கு பெரும் உறுதுணையாய் இருந்த இவர்கள் இருவருக்கும் என்நன்றிக்கடன் என்றென்றும் உண்டு.

இறுதியாக, நான் எனது அருமைத்தாயாரை நேசிப்பது போல், நேசிப்பது எனது பாடசாலையை. எனது பாடசாலையைப் பற்றிய பசுமை நினைவுகளை மீட்டெழுத வாய்ப்பைத் தந்துதவிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி கனடாக்கிளை பழைய மாணவர் சங்கத்திற்கு எனது நன்றி உரித்தாகுக. மேன் மேலும் இச்சங்கம் வளர்ந்து பணி புரிய எனது வாழ்த்துக்கள்.

த. சண்முகநாதன்
விக்டோரியாக் கல்லூரி
பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியரும்
16-10-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் அடைந்த கல்லூரி அனுபவம்

## (கலாநிதி நா. செல்லப்பா, கனடா)

என்னைப் பொறுத்தவரையில் கற்ற கல்லூரி நற்றவானிலும் நனிசிறந்தது என விளங்குகிறது. கண்கண்டது கல்லூரி, காணாதது வான் உலகம். காணாததிலும் பார்க்கக் கண்டதுவே சிறந்தது எனக் கருதுதல் சிறப்புடையதாகும். நான் விக்ரோறியாக் கல்லூரியில் படித்த காலம் 1930 - 1933 வரை ஆகும். அக்காலமே கல்லூரியின் பொற்காலம் எனக் கூறுவதில் பெருமைப்படுகிறேன். சைவமும் தமிழும் ஆங்கிலமும் கொடிகட்டிப் பறந்தது அக்காலமேயாகும். அதற்குக் காரணம் அக்காலத்திலேதான் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் அதிபராகவும், மற்றும் பேராசிரியர் மேனன், லண்டன் M.A. கல்விப்புளோமாப் பட்டம் பெற்ற S.V. சோமசேகரம், பட்டதாரி S. நவரத்தினம், அல்வாய் கந்தையா மாஸ்டர் முதலியோர் உதவி ஆசிரியர்களாகவும் பணி புரிந்தார்கள். இவர்களை எல்லாம் ஒன்று கூட்டிச் சேவை புரிய வைத்த பெருமை முகாமையாளர் செல்லப்பாவுக்கு உண்டு.

நான் நான்கு வருடகாலம் கல்லூரி மாணவர் விடுதியில் தங்கி இருந்து கல்வி பயின்றதன் பேறாகப் பெற்ற அனுபவம் அனந்தம் அவற்றை எல்லாம் படம் பிடித்துக் காட்டுதல் கடினம். எனவே இச் சிறு கட்டுரையில் முக்கியமான சில அனுபவங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். விடுதியில் இருந்து படித்த மாணவர்களுக்கு அதிபர் சிவபாத சுந்தரம் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கூடுதலாக இருந்தது. வார இறுதி ஓய்வு நாட்களில் அதிபர் அவர்கள் விடுதி மாணவர்களை இடையிடையே பாதச் சுற்றுலா கூட்டிச் செல்வார். சுழிபுரக் கிராமத்திலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள திருக் கோயில்களுக்கும் திருவடி நிலையக் கடற்கரைக்கும் கூட்டிச் செல்வார். அப்பொழுதெல்லாம் ஆலய வழிபாடு செய்யும் முறைகளைப் பற்றியும், கணபதி, முருகன், சிவன், சக்தி வழிபாட்டின் நோக்கம் பற்றியும் சாதனைக்குரிய படி விளக்கம் அளிப்பார். இயற்கை அழகைக் கூர்ந்து அவதானித்து அதில் இறைவனின் கருணையை எவ்வாறு உணருதல் வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துவார். கல்லூரியில் நான் பெற்ற நூல் அறிவை அனுபவ மூலம் ஐயம் திரிபு அறத் தெளியும் வாய்ப்புச் சைவப் பெரியார் மூலம் பெறலானேன்.

பள்ளிப் படிப்பில் நாட்டமில்லாது பாடசாலை செல்வதற்கே கள்ளம் செய்து வந்ததால் யாழ்/இந்துக் கல்லூரியில் ஐந்தாம் வகுப்பு ஆண்டுப் பரீட்சையில் கோட்டைவிட்டேன். அதனால் மீண்டும் ஐந்தாம் வகுப்பிலேயே சேர்ந்து விக்ரோறியாக் கல்லூரியில் படிக்க நேரிட்டது. அங்கு நான் பெற்ற பாட அனுபவமும், ஆசிரியர்களின் உளவியற் கல்வி படிப்பித்தல் முறையும் என்னைப் படிப்பில் ஈடுபாடு கொள்ளும்படி தூண்டியது. சைவ போதமும் பெரிய புராணமும், தேவார திருவாசகங்களும் ஒழுங்காகப் பயின்றதன் பேறாக இறைவனிடம் பக்தி சிரத்தை வளரத் தொடங்கியது. நவராத்திரி, சிவராத்திரி, நாயன் மார்குரு பூசைகள் முதலியன சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வந்தன. அவ்வேளைகளில் அதிபர் சிவபாத சுந்தரம் ஆற்றிய சமய விரிவுரைகள் பசு மரத்தாணிபோல் உள்ளத்தில் பதிந்தன. வகுப்புப் பாடபுத்தகங்களுக்கு அனுசரணையாக இருந்த பிற நூல்களில் உள்ள சிறந்த பொருள்களைச் சுருக்கமாக எழுதிக் காட்டும்படி பணிக்கப்பட்டுள்ளேன். அந்தச் சிறந்த பழக்கம், பிற்காலத்தில் என்னை ஓர் உத்தம எழுத்தாளனாக உயர்வுற வழிவகுத்தது. அத்துடன் மாணவர் மன்றத்திலும் சமய விழாக்களிலும் சிற்றுரை ஆற்றும் பயிற்சி பெற்றுப் பாராட்டும் பெற்றேன். அதனால் மேடைப் பேச்சுக் கலை கைவரப் பெற்றேன். அந்த அனுபவங்கள் தான் கௌரவ கலாநிதிப்பட்டம் பெறுவதற்கு உதவின என்பதைக் குறிப்பிடும் போது பெருமை அடைகிறேன்.

விளையாட்டுத் துறையிலும் விக்ரோறியாக் கல்லூரி அக்காலத்தில் மேம்பட்டு விளங்கியது. அக்காலத்தில் கிறிக்கெற் விளையாட்டுப் பிரபல்யம் அடையவில்லை. உதைபந்தாட்டத்திலும் நான் அங்கு பெற்ற அனுபவம் பிற்காலத்தில் கை கொடுத்து உதவியது. பருத்தித் துறை மாதனைக் கரப்பந்தாட்டக் கழகத்திற் சேர்ந்து விளையாடி அகில இலங்கைக் கிண்ணக் கரப்பந்தாட்டப் போட்டியில் 1941ம் ஆண்டு முதலிடம் பெறுவதற்கு உதவினேன். சுருக்கமாகக் கூறுவதாயின் நான் விக்ரோறியாக் கல்லூரியில் பெற்ற அனுபவங்கள் தான் இன்று எனது 84 வயதிலும், உடல் நலமும் உளநலமும், ஆன்மிக நலனும் ஒருங்கே பெற்று இன்புற வாழ்வதற்கு வழிவகுத்தன எனப் பெருமையுடன் கூறுகிறேன்.

பெற்ற தாயைப் போலக் கற்ற கல்லூரியை என்றும் மறவாது போற்றி வாழ்த்திப் பாராட்டுதல் என்கடமையாகும்.

வாழ்க விக்ரோறியாக் கல்லூரி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# GNANAKURU
# TAKE OUT RESTAURANT
## AND CATERING INC.



தமிழ் மக்களின் மத்தியில்
நன்கு அறிமுகமான
பரமகுரு கேற்றறிங்
தற்பொழுது
புதிய பெயரில் புதிய இடத்தில்



**TEL: (416) 264-7785** **CELL: (416) 579-3156**

**2800 EGLINTON AVE. EAST, UNIT 11, SCARBOROUGH, ONT. M1J 2C9**


# சங்கர் அன் கம்பனி

***Importers • Wholesalers Retailers***
***Tamil, Sinhala and Hindi***



அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மரக்கறி, பழவகைகள்,
பூசைத் திரவியங்கள், சுவாமிப் படங்கள், சுவாமிச் சிலைகள்,
சுவாமி விக்கிரகங்கள், பட்டுத் துணிகள், வேட்டி, சால்வை,
அறுகம்புல், மாவிலை, வாழையிலை, வேப்பிலை, வில்வம்
இலை, முருங்கையிலை, கப்பல் வாழைப்பழம்
அனைத்தையும் பெற நாடுங்கள்





***Audio, Video, Compact Discs***
***Video CD's and Laser Discs***

## SANKAR INTERNATIONAL

**425 EGLINTON AVE. EAST, UNIT 6, SCARBOROUGH, ONTARIO, M1K 5G8**
**(416) 759-5100 (416 ) 759-4916**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Open From 7:00am To 10:00pm**

# TOP BREAD

**BAKERY PRODUCTS**

## All Kinds of Pies

(Large and Small)





## All Kinds of Pastries

Muffins-Dounts-Cakes



White Bread
Rose Bread (2Pieces)
100% Whole Wheat
Italian Bread
French Bread
Rye Bread
Raisin Bread
Egg Bread
Bagels (all kinds)
Kaiser Bun
Hamburger Buns
Hot Dog Buns
Raisin Buns
Egg Buns

என்நேரமும் சுடச்சுட இடியப்பம், சம்பல், குழம்பு, கொத்து ரொட்டி, ரோல்ஸ், தோசை, அப்பம் மற்றும் பல உணவுப் பொருட்கள்கிடைக்கும்.

சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் ரொப் பிறட் தயாரிப்புகள் என்று கேட்டுவாங்குங்கள்.

அன்றும் இன்றும் என்றும் தரம் நாடுவோர் வாங்குவது ரொப் பிறட் தயாரிப்புகளையே.

இடியப்பம்
இடியப்பக் கொத்து
றொட்டி
கொத்து றொட்டி (Mutton, Beef, Chicken)
அப்பம்
தோசை
புட்டு
பிஸ் பண்
வெயிற்றபிள் பண்
ஒனியன் பண்
றோல்ஸ் வகைகள்
றோஸ் பண்
மட்டன் றொட்டி
வெயிற்றபிள் றொட்டி
பட்டர் பனிஸ்
இஞ்சி பிஸ்கட்
கொம்பு பாண்

**Tel:416-439-7911**
**42 Tuxedo Court Cr.**
**Scarborough, Ont.**
**M1G 3S3**

**Tel:416-298-1561**
**3251 Kennedy Rd. Unit 3,**
**Scarborough, Ont.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*WITH THE BEST COMPLIMENTS FROM*


# THARSANAS SUPERMARKET

உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில்
பூர்த்தி செய்ய நீங்கள் நாடவேண்டிய இடம்

தமிழ், மலையாள,
இந்தி வீடியோப்
பிரதிகளுக்கு
நாடுங்கள்

Sri Lankan, East Indian, Canadian Food Items, Fresh Fish, Fresh Meat, Vegetables, Video & Audio Video Transfer





# தர்ஷனாஸ் சுப்பர் மார்க்கட்

***3415 FIELD GATE DRIVE***

***(BLOOR & FIELD GATE)***

***TEL: (905) 625-8152***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TUXEDO SANGAMAM

**Exclusive Party Hall**

## நவீன விருந்து மண்டபம்

**சகலவிதமான வைபவங்களிற்கும் தரமான உணவுடன் மற்றும் தரமான சேவைகளுக்கும் *(Full Package)***

**கண்ணை கவரும் வண்ண வண்ண அலங்காரம், காதிற்கினிய கவின்மிகு கீதங்கள், அறுசுவை உணவுப்பண்டங்கள், மலர்ந்த முகத்துடன் அன்பான உபசரிப்பு, இவையனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டியது**

## RAM (இராம்)



42 Tuxedo Court,
Scarborough, Ontario.
M1G 3S3

Tel: 416-439-2859
Fax: 416-439-5047
Cell: 416-347-3412

**Toll Free: 1-877-889-7264**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சேவைக்காலத்தில்

முர்த்தி, தலம், தீர்த்தம், என்பவற்றால் பெரும் பெயரும் புகழும் பூத்த முதுபெருந் தலங்களுள்ளே பறாளாயம்பதி முருகன் திருத்தலமும், ஈஸ்வர விநாயகராலயமும் தன்னகத்துடையதும் தொன்மை மிக்கதும் சைவம் தவிர்ந்த பிற சமயத்தவர் எவருமே இல்லாத சோழபுரத்தை மருவிய "சுழிபுரம்" எனும் நற்கிராமம் பெரியதும், வளங்கள் பலமிக்கதுமான அறவழிக்கிராமமாகும். இக்கிராமத்தின் சிறப்பிற்குப் பலசான்றுகளுள. இக்கிராம வளர்ச்சிக்கு முதுகெலும்பாகக் கருதப்படுவது விக்ரோறியாக் கல்லூரியாகும். ஆரம்பத்தில் இக்கல்லூரியில் பிற மாவட்டங்களிலிருந்து வந்து தங்கிப் படிக்கக் கூடிய விடுதி வசதிகளும் இருந்தன. சைவத்தின் வளர்ச்சியும் ஆங்கில வளர்ச்சியுமே இங்கு கண்ணாகக் கருதப்பட்டுப் போதிக்கப்பட்டன. சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் அதிபராக இருந்து ஆற்றிய சேவை இக்கல்லூரிக்கு பெரு மதிப்பைத் தந்தது, என்றால் மிகையாகாது. இக்கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணாக இருந்து வளர்த்த அதிபர்கள் வரிசையில் திருவாளர் அருணாசலம் அவர்களையும் குறிப்பிடுவதை நான் பெரு மதிப்பாகக் கருதுகின்றேன். மாணவனாகவும், பின்னர் இக்கல்லூரியில் ஆசிரியனாகவும் பணிபுரியக் கிடைத்ததையிட்டு நான் ஆண்டவனுக்கு என்றென்றும் அடிமையானவனாவேன். எனக்கு நான்கு அதிபர்களின் கீழ் பணி புரியும் வாய்ப்புக் கிட்டியது. திரு அருணாசாலம் அவர்கள் சேவை புரிந்த காலம் மிகவும் இக்கட்டான கால கட்டம் பெற்றார்களுக்கு, கல்வித்துறையினருக்கு, இராணுவத்தினருக்கு, விடுதலை விரும்பிப் போரிடும் பல்வேறு குழுவினருக்கு பதில் கூறும் நிலையில், நிலை தளம்பாமல் தனது தனித்தன்மையைப் பேணி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் உழைத்திட்ட உன்னதச் செம்மல். ஆயுதக் குழுக்களுள் முறுகல் நிலை உச்சக் கட்டத்தில் இருந்த காலம் எல்லாக் குழுக்களுக்கும் தனித்தனியே மாணவர்கள் பங்கு தேவைப்பட்டது. ஒன்றிற்கு உதவப்போனால் ஏனையவற்றிற்குப் பிடிக்காது. இப்படி விடுதலைக் குழுக்குளுக்கு ஆதரவாக நடந்து கொண்டால் இராணுவத்திற்குப் பிடிக்காது. இப்படி முள்ளின் மேல் விழுந்த சேலையின் நிலை போல காணப்பட்டபோதும் தன் நிலை தவறாது மாணவர் முன்னேற்றத்திற்கு வித்திட்ட மாவீரர். இவர் காலத்தில் மாணவர் எல்லாத்துறைகளிலும் சிறந்த பெறுபேறுகள் பெற்றுள்ளனர். இக்காலத்தில் விளையாட்டுத்துறையின் பொறுப்பாசிரியராக இருந்த எனக்கு வழிகாட்டியாக இருந்து தந்த ஊக்கத்தின் விளைவாக மாணவர்கள் உடல் நலக்கல்வி, அணிவுடைப் போட்டி, மெய்வல்லுனர் போட்டி, உதைபந்தாட்டப்போட்டி, கிரிக்கட் போட்டி என பலவற்றிலும் பங்குப்பற்றி, சிறப்புடன் விளையாடி பாடசாலைக்கு பெருமையை ஈட்டிக் கொடுத்தனர். கனிஸ்டப் பிரிவு மாவட்ட உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியனாகி பாடசாலைக்கு பெருமதிப்பை ஈட்டிக் கொடுத்தது.

வே. முத்துக்குமாரசாமிக் குருக்கள்
பழைய மாணவர் / முன்னாள் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்


வீணாலயம்

VEENA CLASSES



இசைக்கலைமணி, சங்கீத கலா வித்தகர்
திருமதி. ஜெயந்தி இரட்ணகுமார்
அவர்களால் வீணை வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

* யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் பட்டம் பெற்றவர்
* வடஇலங்கை சங்கீத சபை சங்கீதகலாவித்தகர் பட்டம் பெற்றவர்
* சங்கீத ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றியவர்
* 15 வருடங்கள் ஆசிரிய அனுபவம் பெற்றவர்

தொடர்புகளுக்கு: (416) 439-9307


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# brimell toyota 30 (YEARS)

சர்வதேச தரம் மிக்க

TOYOTA

வாகனம் ஒன்றைக் கொள்வனவு

செய்ய அழையுங்கள்

CHRIS DIAS



**பழைய புதிய TOYOTA வாகனங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.**

FROM 1.9% INTEREST

**(416) 292-2241**

**4600 SHEPPARD AVENUE EAST, SCARBOROUGH, ON., M1S 3V5**

**Visit us on the web www.brimelltoyota.com**

# SleepComfort

*Canada Inc.*


Manufacturers of Quality Mattresses

WHOLESALE & RETAIL

Open Mon. to Sat. 10 a.m. to 6 p.m.

CHRIS DIAS

KANTHI DIAS



2400 Midland Ave., Unit 113 -115
( South of Sheppard )
Scarborough, ON M1S5C1

Tel : ( 416 ) 609-0070
Tel : ( 416 ) 615-1636
Fax : ( 416 ) 615-1638

Email : sleepcomfortcanada @ on.aibn.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Y2K
Studios Inc

# Y2K STUDIOS

**நிழலுருவங்களை நிஜமாக்கித் தருபவர்கள்**

திருமணம், பிறந்தநாள், பூப்புனித
நீராட்டு விழா
மற்றும் உங்கள் சகலவிதமான
கொண்டாட்டங்களை நவீன
தொழில்நுட்பமுறையில் உங்கள்
கைகளில் நிழலா? நிஜமா? என்று
நீங்கள் சந்தேகம் கொள்ளும்
வகையில் படமாக்கித் தருபவர்கள்



*Weddings, Birthdays, Parties
and for all occations
for Professional Photographs*

Y2K STUDIOS

***S. Siva***

**2480 Eglinton Ave. East**
**Tel: (416) 281-2222 / (416) 436-2222**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH COMPLIMENTS FROM

SIVA KESAVAN Ph.D
U.S.A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Vijaya's Silk*

கல்யாண
கூறைப்புடவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்



TEL: (905) 273-7997
FAX: (905) 273-7323

**விஜயாஸ் சில்க்**

27 Dundas St. E., Mississauga, ON L5A 1V9

**M வீடியோ மாருதி**


**VIDEO MARUTY**



Toronto
**VEL KIRUBA**
Tel: 416-751-2060
1841 Lawrence Ave. e
(Lawrence & Pharmacy)

Montreal
**VEL INPAM**
Tel: 514-989-5021
2212 Rene Levesque W
(Metri Alwater)

**Tel: 416-288-0277** **Fax: 416-297-9111**



# சிண்டி



**துரித பணமாற்று சேவை**

பணம் அனுப்புதல்
உள்நாடு, வெளிநாடு
உங்கள் பணத்திற்கு அதிகூடிய பெறுமதி
விரைவான சேவை

**SINDI FININCIAL SERVICES INC.**

Interac

**2425 Eglinton Ave. East, Unit 07**
**Shankar & Co Plaza**
**(Kennedy & Eglinton)**
**Scarborough, Ont**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு வீதம்

1962ம் ஆண்டு கார்த்திகை மாதம் தபால் காரனின் ஊதல் கேட்கிறது. மாதம் இரண்டு தபால் அப்பாவிடம் இருந்து வரும். அவர் மலையகத்தில் தலைமை ஆசிரியர் விடுதலைக்குத்தான் வீட்டில் வந்து நிற்பார். ஆனால் அவரது கடிதம் தான் நேற்றே வந்து விட்டதே. இருந்தும் ஓடிப் போகிறேன் நெஞ்சு படபடக்க. ஏனென்றால் நான் எழுதிய யாழ் இந்துக் கல்லூரி admission பரீட்சையின் முடிவை எதிர் நோக்கித் தான் தபால்காரன் ஒரே ஒரு தபாலை கையில் கொடுக்கிறான். தபால் கவரின் மேலேயே யாழ் இந்துக் கல்லூரியின் அச்சு எழுத்துக்கள் நெஞ்சை மேலும் படபடக்க வைக்கிறது. தபாலை எப்படி கிழித்தேன் எப்படி அதனுள் இருந்த கடிதத்தை பிரித்தேன் என்பதே தெரியாது. கையில் இருந்த கடிதத்தை கண்ணால் ஒரே பார்வையில் அளவிடுகிறேன். Advanced Level க்கு admission கிடைத்ததா இல்லையா என்று. You are admitted to... என்ற வார்த்தைகள் கண்ணில் பட்டதும் கால்கள் துள்ள வீட்டு வாசலை நோக்கி ஓட ஆரம்பிக்கிறேன். "என்ன admission கிடைத்து விட்டதா?" தபால் காரன் கேட்கிறார். அதுவரை அவர் நின்று கொண்டிருந்ததையே நான் கவனிக்கவில்லை. 'ஓம்' என்று சொல்லிக் கொண்டே வீட்டினுள் ஓடினேன் அம்மாவிடம் சொல்ல. அவவிற்கும் மட்டற்ற மகிழ்ச்சி.

அடுத்த நாள் பாடசாலைக்குப் போய் நண்பர்களிடமும் வகுப்பு ஆசிரியர்களிடமும் மகிழ்ச்சியுடன் யாழ் இந்துக் கல்லூரியில் admission கிடைத்த செய்தியைச் சொல்கிறேன். அவர்களுக்கும் மகிழ்ச்சிதான். எல்லோரும் என்னை Congratulate பண்ணினார்கள். GCE Advanced Level படித்து Engineering க்கு எடுபட வேண்டுமானால் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளில் யாழ் இந்துக் கல்லூரியும் ஸ்கந்தவரோதயாவும் தான் அப்போது முன்னணியில் நின்றன. ஆகவே இந்த இரு கல்லூரிகளிற்கும் Admission எடுப்பதென்றால் அவர்களுடைய தெரிவுப் பரீட்சையில் திறமையாகப் Pass பண்ண வேண்டும்.

பாடசாலை முடிகிற நேரம், கடைசிப் Period (பாடம்) பாடசாலை Peon கிருஷ்ணர் வந்து என்னை அதிபர் பார்க்க வேண்டுமாம் என்று கூட்டிச் சென்றார். அறைக்குள் சென்றதும் கைகளைக் குலுக்கி Congratulate பண்ணினார் அதிபர் வே. தம்பு. அதன் பின் எனது future plan களை எல்லாம் விசாரித்து விட்டு எனது குடும்பத்தைப் பற்றியும் தந்தையாரைப் பற்றியும் விசாரித்து அறிந்து கொண்டு வழியனுப்பினார்.

வாரங்கள் ஓடி மார்கழி விடுமுறையும் வந்தது. எனது தந்தையும் விடுமுறையில் வந்து விட்டார். ஒருநாள் மதியம் எங்கள் வீட்டு வாசலில் ஒரு கறுப்பு Morris Minor கார் வந்து நிற்கிறது. அதிலிருந்து அதிபர் வே. தம்பு இறங்கி எனது தந்தையுடன் பேசுகிறார். இருவரும் வீட்டினுள் செல்கின்றனர். நான் பிள்ளையார் கோவில் தேர் முட்டியின் மேலே இருந்தபடியே பார்த்துக் கொண்டு இருக்கிறேன். ஒரு அரை மணித்தியால நேரம் தான் இருவரும் பேசியிருப்பார்கள். அதிபர் திரும்பிக்காரில் சென்று விட்டார். என்னை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பும் பொறுப்பை 100% தான் எடுப்பதாகவும் தன்னில் நம்பிக்கை இருந்தால் என்னை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலேயே GCE Advaced level படிக்க விடும்படியும் கேட்டுள்ளார் என்றும் அதற்கு எனது பதிலை எதிர் பார்ப்பதாகவும் தனக்கு அதிபரின் வாக்கில் நம்பிக்கை உண்டு என்றும் அப்பா எடுத்துக் கூறினார். எதற்கும் யோசித்துப் பதில் சொல் என்றார் என் தந்தையார்.

Advanced Level வகுப்பில் 7-8 மாணவர்கள்தான். ஆனால் அதில் என்னைத் தவிர மற்றவர்கள் அனைவரும் Biology / Zology படிப்பவர்கள். நான் மட்டுமே Pure/Applied Math எடுப்பவன்.

Chemistry க்கு Mrs Wardsworth மிகவும் தூய்மையான மடிப்புக்கலையாத வெள்ளைச் சேலையில் (7th day Adventist) மலர்ந்த பரந்த முகத்துடன் மாணவர்களுடன் மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் படிப்பிப்பார். நல்ல பொறுமைசாலி. பாடத்தில் நல்ல அறிவும் படிப்பிப்பதில் திறமையும் கொண்டவர். Theory படிப்பிப்பதில் கஷ்டங்கள் இருக்கவில்லை ஆனால் Practicals செய்யத் தொடங்கவும் பாடசாலையின் இரசாயன கூடத்தின் பற்றாக்குறை தெரியத் தொடங்கிற்று. இரசாயனப் பரீட்சைகளின் இடையில் Bransen Burner க்குத் தேவையான Gas நின்றுவிடும். பாடத்தின் இடையில் பாடசாலை Cleaner தொழிலாளி 'பத்தனை' தேடி Gas Generating tank check பண்ணி திருப்பவும் Gas வரத் தொடங்கவும் பாடம் முடியவும் சரியாகும். சில வாரங்கள் சென்று மாதங்கள் சென்றும் தேவையான உபகரணங்கள் இரசாயனப் பொருட்கள் ஓடர் பண்ணியிருந்தும் வருவதில் தாமதம். இப் பற்றாக்குறை மாணவர்களின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கும் என்றறிந்து அதிபரும், Mrs WardoWorth ம் ஆக வட்டுக் கோட்டை Jaffna College ல் இரசாயன Practicals செய்வதற்கு ஒழுங்கு செய்து கொடுத்தனர்.

Physics பாடத்திற்கு Mr. கருணாநிதி அண்மையில் தான் பல்கலைக்கழகத்தால் பட்டதாரியாகியவர். படிப்பிப்பதில் நல்ல ஆர்வம். Chemistry Lab கீழே அதற்கு மேல் Physics Lab. அதிலிருந்து பாடசாலை முழுவதையுமே கண்காணிக்கலாம். அதிபரின் அறை தொடக்கம் அனேகமான வகுப்பறைகளையும் பார்க்க வசதியான மேல் மாடியில் உள்ளது Physics Lab. தேவையான Telescope ம் உண்டு. நல்ல காட்சிகள் என்றால் ஆசிரியரும் மாணவனாகிவிடுவார். Physics என்றாலே எங்களுக்குக் கொண்டாட்டம். ஆனால் பரீட்சை நெருங்கியதும் மாணவர்களை சனி, ஞாயிறு என்று கூடப் பாராமல் ஆசிரியர் தன் வீட்டிற்கே (சண்டிலிப்பாயில்) வரவழைத்து படிப்பிப்பார். நல்ல பொறுப்பு உள்ளவர்.

Pure Mathematics படிப்பித்தவர் தியாகராஜா மாஸ்டர் 'குட்டித் தியாகர்' என்று பட்டப் பெயர். அவருடையது car பச்சை Moris Minor. சரியான கோபக்காரன். கணக்கு செய்வதில் தடங்கல் வந்து விட்டால் கைக்குட்டையை எடுத்து மொட்டந்தலையை இரண்டு தடவை உரஞ்சி துடைத்துக் கொண்டு வகுப்பிற்கு வெளியிலுள்ள விறாந்தையில் முன்னுக்கும் பின்னுக்கும் இரண்டு தடவை நடந்து விட்டால் தடங்கல் எல்லாம் போய் விடும். Cricket Test Match Season வந்து விட்டால் போதும் Transistor Radio காதோடு இருக்க வேண்டும். ஒரே ஒரு மாணவனுக்கு ஒரே ஒரு ஆசிரியர் நான் என்ன செய்தாலும் செய்யா விட்டிலும் தெரிந்து விடும்.

Applied Math க்கு அதிபர் மற்றப் பாடங்களெல்லாம் ஏதோ ஒரு வகுப்பு அறையில் இருந்து படித்தால் Applied Math மட்டும் விறாந்தையில் (நடைபாதையில்) இருந்தே படித்தேன். அதிபரின் அறைக்கு வெளியேயுள்ள நடைபாதையிலேயே ஒரு மேசையும் இரு நாற்காலிகளும் உண்டு. ஒரு கதிரையில் அதிபர் மற்றதில் நான். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் நெல்லி மரம் நல்ல காற்றோட்டம். மத்தியான சாப்பாட்டின் பின் போயிருந்தால் கண்ணைச் சுழற்றிக்கொண்டு நித்திரை தான் வரும்.

ஒரு மாணவனுக்கு நான்கு ஆசிரியர்கள். மாணவனுக்கு படிப்பில் ஆர்வம் உண்டோ இல்லையோ ஆசிரியர்கள் நால்வருக்கும் 100 விதத்திற்கு மேல் ஆர்வம் இருந்திருக்க வேண்டும். ஆதலினால்தான் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மறைந்த திரு அமிர்தலிங்கம் ஒருவரே 65ம் ஆண்டுவரை பல்கலைக் களகம் சென்றார் என்ற சாதனையை முறியடித்துக் காட்டினர். திரு அமிர்தலிங்கம் பல்கலைக்கழகம் புகுந்ததற்கும் 1965க்கும் இடையில் பல வருடங்கள். ஆனால் நான் பல்கலைக்கழகம் சென்றதன் பின் அடுத்த ஆண்டுகளிலேயே பலப்பல மாணவர்கள் பரீட்சைகளில் தேறி பல்கலைக்கழகம் புகுந்துள்ளார்கள். மரபு முறையாக இருந்து வந்த மனத் தடங்கலை நீக்கி விக்டோரியாக் கல்லூரியில் இருந்தும் பல்கலைக்கழகத்திற்குப் போகலாம் என்ற மனத் தைரியம் வருவதற்கு வழி வகுத்த பெருமை மறைந்த அதிபர் வே. தம்புவையே சாரும். அதற்குக் கருவியாக என்னைப் பாவித்தார்கள் என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

1965ல் அகில இலங்கையிலும் 100 வீதம் பல்கலைக்கழகம் செல்ல வைத்த பாடசாலை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

க. பாலச்சந்திரன்

குறிப்பு: கட்டுரையில் வரும் சில நிகழ்ச்சிகள் மனத்தின் ஆள Memory யிலிருந்து எடுத்தபடியால் உண்மை நிகழ்ச்சிகளிலிருந்து சிறிது விலகி இருக்கலாம். கட்டுரையின் முதன்மைக் கருத்து உண்மையானதே.


THE TELE BEST!

RETAILS & WHOLE SALE ACCESSORIES




CALL: 416-759-0200
FAX: 416-759-9103



சேவையில் நம்பிக்கை
நாணயம் உத்தரவாதம்
அத்துடன்
தொலைபேசியின் தராதரம்

2390 EGLINTON AVE, EAST
SUIT 210 SCARBOROUGH
ONT, M1K 2P5


CALL:
GANESH: 416-729-5457
MOHAN: 416-899-7753


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத சுரபி

ரேக் அவுட் அன்ட் கேற்றறிங்

திருமண வைபவங்கள்
பிறந்தநாள் வைபவங்கள்
மற்றும் அனைத்து வைபவங்களுக்கும்
உங்கள் தேவைக்கேற்ப
உணவுகள் சிறந்த முறையில்
தயாரித்து வழங்கப்படும்.



## AHMUTHA SURABI

2847, Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8



ஒரு புதிய அறிமுகம்

கனவு கற்பனை வடிவம்

**PRO MAR**
Awards & Promotions




**Trophies**
**Awards**
**T.Shirts**
**Caps**
**Mugs**
**Glassware**
**and more....**

மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும்
585 Middle field Rd, Scarborough, Unit-1

**416-29 12344**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# QUALITY BREADBAKERY
# குவாலிற்றி பிறெட் பேக்கறி

பலவிதமான பாண்வகைகள், பணிஸ் (Buns) கேக் வகைகள் (Cakes)
மப்(f)பின் (Muffins) இன்னும் பல......
உங்களுக்குத் தேவையான சிற்றுண்டி
வகைகளை எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்






**1221 Markham Road, Unit #13**
**(Markham & Ellesmere**
**Tel: (416) 431-9829**

**NEW QUALITY BREAD BAKERY PLUS**
**880 ELLESMERE ROAD, #3**
**SCARBOROUGH**
**(KENNEDY/ ELLESMERE)**
**(416) 292 9100**

## SARAVANA'S MARKET

Specialize in Sri Lankan, East-West Indian
Food Products & Spices, Fresh Meat
Fish & Vegetable

தரமான இலங்கை, இந்திய உணவுப் பொருட்களும், தரமான
வீடியோப் படங்கள் வாடகைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.
உடன் இறைச்சி, மீன், மரக்கறிவகைகள்
அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



1023 Markham Road
Scarborough, Ontario.
M1H 2Y5

Tel.: (416) 439-5727
Fax: (416) 439-9632

## BHANU JEWELLERY
## பானு ஜுவலறி இங்.





First quality 22k gold
Diamond Jewllery
Export custom jewllery from
Singapore and wholesale
repairs

www.webtamil.com/banu



அசல் 22K தங்க வைர நகைகளுக்கு நாடுங்கள்

**880 Ellesmere Rd., Unit 106F**
**Scarborough, Ontario M1P 2W6**

**Tel: (416) 335-7295**
**Fax: (416) 335-7296**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முன்னோர் உருவாக்கிய ஓர் அழியாச்சொத்து"

எமது பகுதியிலுள்ள பல கிராமத்திலிருந்து வரும் சிறுவர்களின் வாழ்க்கையை வளம் பெறச் செய்யும் மத்திய கல்லூரியாக விளங்கும் விக்ரோறியாக் கல்லூரி பற்றிய கருத்து வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

1997 ம் ஆண்டு யாழ்மாவட்ட புனர் நிர்மான வேலைகளை செய்வதற்கு முதல் முதலாக முன் வந்த ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தில் (GT2) பணிபுரிய சந்தர்ப்பம் கிடைத்தமை GT2இன் புனர் நிர்மாணத்திட்டத்தில் ஒன்றாகிய விக்ரோறியாக் கல்லூரியை எனக்கு ஒப்பிட்டு அளவிடக் கூடியதாக இருந்தது.

ஆரம்பகாலத்தில் யாழ்மாவட்டத்தில் பாடசாலை புனர் நிர்மாண வேலைகளை தொடங்கிய பொழுது GT2 தனது கொள்கைக்கு அமைவாக இத்திட்டத்தில் பாடசாலை சமூகத்தையும் தனது பங்காளியாக இணைத்து பங்கேற்க வைக்க முனைந்த பொழுது கூடிய பிரயத்தனம் எடுக்க வேண்டியிருந்தது. நடந்த போரின் விளைவு, தொடர்ந்து கொண்டிருக்கும் போரின் தடைகள், பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து இடப் பெயர்வினால் உடமைகள் இழந்து, உறைவிடங்கள் அழிக்கப்பட்டு, உறவுகளைப் பிரிந்து திரும்பவும் தமது இடங்களிற்கு வந்த சமயத்தில் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையிலுள்ள மனம் உடைந்த மக்களுக்கு தாம் "அரசாங்க பாடசாலைக்கட்டிடங்கள்" புனர் நிர்மாணம் செய்வதற்கு ஏன் உதவவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. இவர்களை அணுகி GT2 திட்டத்திற்கு அமைவாக பங்காளர்களாக்குவதற்கு ஆற்றுப்படுத்தல் செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. சில பாடசாலைகளில் பல தடவைகளை திரும்ப திரும்ப சந்தித்து கலந்துரையாடல் மூலம் நீண்டகால அபிவிருத்தி கண்ணோட்டத்தினை வலியுறுத்தி நம்பிக்கை ஏற்படுத்த வேண்டி இருந்தது.

<u>ஈடுபாடுடைய பாடசாலை சமூகம்</u>

எமது விக்ரோறியாக் கல்லூரியில் வைத்த முதலாவது பாட-சாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்திலேயே புனர் நிர்மாணத்திட்டத்தில் பங்கேற்பதில் உச்ச படியில் பாடசாலை சமூகம் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

GT2 இன் கொள்ளைத் திட்டமிடலுக்கு அமைவாக பாட-சாலை சமூகம் பல இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் பெற்றோர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் என சகலரும் தத்தமது பங்களிப்பினை செய்தமை, ஏனைய பாடசாலைகளிலும் இதே போல செய்ய முடியும் என்ற நம்பிக்கையை விக்ரோறியாக் கல்லூரி எனக்குக் கொடுத்தது.

<u>முன்னோடி மாணவர்கள்</u>

யாழ்மாவட்ட பாடசாலை புனர் நிர்மாணத்திட்டம் மூலம் மாணவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஏற்படப் போகும் விளைவுகளை ஆய்வு செய்வதற்கு ஜேர்மனியிலிருந்து வந்த பிரதிநிதியை சந்திப்பதற்கு விக்ரோறியாக் கல்லூரி மேல் வகுப்பு மாணவர்கள் சிலருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இம் மாணவர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி தமது பலம், பலவீனம், வளங்கள், தேவைகள் பற்றிய நிலைப்பாட்டினை தயக்கமின்றி சுதந்திரமாக வெளியிட்டமை அவர்கள் தலைமைத்துவத்தை எடுத்துக் காட்டியது.

<u>ஆர்வமுள்ள அதிபர்கள்</u>

விக்ரோறியாக் கல்லூரியில் கடமை புரிந்த, புரியும் அதிபர்கள் பாடசாலை முன்னேற்றம், மாணவர்களின் தலைமைத்துவம், சமூக அபிவிருத்தியில் காட்டும் அக்கறைதான் பலவருடங்களாக தொடர்ந்தும் இப்பாடசாலையை நல்ல முறையில் இயங்க வைப்பதற்கு காரணம் என்பதற்கு பல எடுத்துக் காட்டுகள் உண்டு. பாடசாலை அதிபர்கள் திறன் வாய்ந்தவர் களாகவும், அர்ப்பணிப்புள்ளவர்களாகவும், தலைமைத்துவத்துடன் இயங்குவதற்கு அந்த அழகான, அமைதியான சூழலும் ஒரு காரணமாக இருக்கலாம்.

<u>அழகான கட்டிடமும் அமைதியான சூழலும்</u>

விக்ரோறியாக் கல்லூரியின் பிரமாண்டமான பழமையான கட்டிட தொழில் நுட்பத்துடனான அழகான விசாலமான மண்டப அமைப்பு GT2 நிறுவன ஜேர்மனியர்களை ரசிக்க வைத்தது. அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட மாடிக்கட்டிடமும் பழைய கட்டிடத்திற்கு இணையாக மறுபுறத்தில் அழகாக அமைந்துள்ளது. அந்தக் காலத்திலேயே சவுக்க மரங்களை நாட்டி அழகூட்டிய சூழல் மேலும் மரங்களை நாட்டி பச்சைப் பசேலென செழிப்புற எடுப்பான தோற்றமும் அமைதியான சூழலையும் அப்பாடசாலையைக் கடந்து செல்லும் பொழுது பார்த்து ரசிப்பதுடன் இது ஒரு மிசன் பாடசாலையா? என பலராலும் கேட்கப்படும் பொழுது இல்லை எம்மவர்களால் உருவாக்கி முகாமைத்துவம் செய்து அரசாங்கத்திடம் கொடுத்த பாடசாலை எனச் சொல்லும் பொழுது பூரிப்படைவதுண்டு.

<u>முறையான பராமரிப்பு</u>

GT2இன் அவதானிப்பில் பல பாடசாலை கட்டிடங்கள் போரினால் அழிந்தது மட்டுமல்ல சரியான பராமரிப்பின்றியும் சேதமடைந்துள்ளன என்பதை புரிந்து கொண்டோம். ஆனால் விக்ரோறியாக் கல்லூரி கட்டிடங்களை அழகாக அமைந்ததுடன் நின்றுவிடாது முறையான பராமரிப்பு தொடர்ந்தும் செய்து வருவது அப்பாடசாலையில் தொடர்ந்து பணியாற்றிவரும் அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விகற்கும் மாணவர்களது அக்கறையை எடுத்துக்காட்டுகிறது.

<u>மாணவர் விருத்திக்கு உதவும் வளங்கள்</u>

மாணவர்களின் விருத்திக்கு ஏற்ற செயற்பாடுகள் பல இப்பாடசாலையில் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு மாணவரின் திறமைக்கு ஏற்ப வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு உறுதுணையாக இருந்தபோதும் இடம் பெயர்வின் போது இந்த வளத்தை இழக்க நேரிட்டது. அழிந்த இந்த வளத்தை கட்டி எழுப்புவதற்கும் தளபாட வசதியினை நிறைவு செய்வதற்கும் GT2 இன் உதவி விக்ரோறியாக் கல்லூரிக்கு கிடைத்தது. மேலும் இதை முன்னேற்றுவதில் பாடசாலை சமூகம் பெரு முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. இதில் திறந்த வெளியரங்கு, விளையாட்டு மைதானம் முக்கிய அம்சங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>வெளிப்படையான கணக்கு</u>

பாடசாலை அபிவிருத்தி சபையானது ஒவ்வோரு பழைய மாணவர் சங்க நிதி உதவிகளையும், சர்வதேச நிறுவன உதவி, அரசாங்க உதவி, பெற்றோர், மாணவர் போன்ற பல வழிகளில் பெறும் உதவிகளையும் வெளிப்படையான கணக்கு வரவு செலவு காட்டுவதினால் சகலரின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

<u>விளையாட்டு மைதானம்</u>

இம்மைதானம் இப்பாடசாலை சமூகத்திற்கு மட்டுமன்றி சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல பாடசாலைகளின் பொது விளையாட்டு நிகழ்வுகளுக்கும் பயன்படுவது குறிப்பிடத்தக்கது. இதனால் ஏனையோருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைக்கின்றது. GT2இன் விளையாட்டுக் குழு பங்காளியாகிய விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களுடன் கிரிக்கெட் சினேகிதப் போட்டியொன்றுக்கு விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாட வந்த பொழுது மிக உற்சாகமாக வரவேற்று இணைந்து விளையாடி உபசரித்த பண்பு என்னைப் பெருமிதம் கொள்ள வைத்தது.

<u>பழைய மாணவர் சங்கம் கனடா கிளை</u>

2000ம் ஆண்டில் கனடா வந்த பொழுது பழைய மாணவர் சங்க உறுப்பினர்களை சந்தித்து போர் தொடர்ந்து நடந்து கொண்டு இருந்தாலும் பாடசாலை முன்னேற்றத்தில் பழைய மாணவர்களது பங்கேற்பு தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியத்தையும், போரில் கட்டிடம் அழித்தாலும் மாணவர்களது தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் விருத்திக்கும் நாம் செய்யும் உதவிகள் வீண் போகாது என்பதனை எடுத்துக் கூறி உற்சாகம் ஊட்டுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

2001ம் ஆண்டில் கனடா வந்த பொழுது தாமாக உற்சாகத்துடன் பாடசாலைக்கு உதவுவதற்கு முன்வந்த கனடா பழைய மாணவர் சங்க உறுப்பினர்களைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தேன். தொடர்ந்தும் பழைய மாணவர் சங்கம் தனது சேவையை முழுமனதுடன் செய்து பாடசாலைக்கு அத்தியாவசிய தேவையான விளையாட்டு மைதானத்தின் விஸ்தரிப்பிற்கான நிலத்தை வாங்குவதற்கும் திறந்த வெளி அரங்கினை திருத்தி அமைப்பதற்கும் ஆர்வத்துடன் காத்திருக்கும் பாட-சாலை சமூகத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

GT2இல் திறம்பட என் பணியைச் செய்வதற்குரிய எனது ஆற்றலை வளர்க்க உதவிய எமது பாடசாலையாகிய விக்ரோறியாக் கல்லூரியை வாழ்த்தி வணங்குகின்றேன்.

இ. பொன்மலர்
சமூக ஆற்றுப்படுத்துனர்
G.T.2. JRP
மூளாய், சுழிபுரம்


brimell toyota 30 (YEARS)



புதிய கார்கள்
பாவித்த கார்கள்
குறைந்த விலையில்
வாங்குவதற்கு இன்றே
அழையுங்கள்

MR. PILLAI

416-292-2241 EXT: 239



Cell: 416-565-0399




TOYOTA

4600 SHEPPARD AVENUE EAST, SCARBOROUGH, ON, M1S 3V5

Visit us on the web www.brimelltoyota.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1995 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்து வைத்த போது எடுத்த படம்



2001 ஆம் ஆண்டின் புதிய நிர்வாக சபையும் ஆலோசகர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டு நினைவுகள்.....













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# R & S AUTO SALES



## TOP QUALITY USED CAR DEALER

28 years experience
We sold Austin Cambridge & Morris Oxford in Sri Lanka
We are selling Honda & Toyota in Canada

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்கள்
விற்பது எமது விசேட திறன்



**BUY - SELL - TRADE**

**HONDA - TOYOTA-GM-MINI VANS**

***Radha***


***Tel: (416) 412-3838 Fax: (416) 412-1174***

***4362, Sheppard Avenue East, Scarborough, ON. M1S 1T6***
***(Between Brimley & Midland on Sheppard Ave. E.)***



## Madras Mahal

-Dining
-Take-Out
-Catering Services
Available





L.L.B.O

***Authentic South Indian Family Cuisine***

**Business Hours**
**6 Days a Week 12 noon - 11 Pm**
**Tuesday Closed**

**416-269-3666**
**286 Markham Road,**
**(Markham & Eglinton)**
**Scarborough, ON**
**M1J 3C5**



**Dr. Yarlini Karunanithy O.D**
**OPTOMETRIST**
**Eye Examination,**
**Glasses and Contact Lenses**





***Tel: (416) 429-2548***

***Location:***
***Gateway Corporate Center***
***10 Gateway Blvd. #130***
***North York, On.***

OHIP and Private Insurance accepted
Evening and weekend appointments available


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**www. Victoriacollege.com**

உலகெங்கும் பரந்து வாழும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் சகல பழைய மாணவர்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும்நோக்கில் பழைய மாணவர் சங்க கனடா கிளை இணையத்தளம் ஒன்றை உருவாக்கவுள்ளது. எமது கல்லூரியினதும் பிரதேசத்தினதும் கலை கலைச்சார விழமியங்களையும் பிரதிபலிக்கும் நோக்கில் இவ் இணையத்தளம் உருவாக்கப்படவுள்ளது.

கல்லூரி பற்றிய தகவல்கள் மற்றும் கல்லூரி சம்பந்தமான முக்கிய நிகழ்ச்சிகள் அதிபர் ஆசிரியர்களின் விபரங்கள், காலத்தால் அழியாத புகைப்படங்கள், உலகளாவிய ரீதியல் செயற்படும் பழைய மாணவர்கள் சங்கங்கள் என்பன போன்ற பலப்பல விடயங்கள் இத்தளத்தினுள் உள்ளடக்கப்படவுள்ளது. முக்கியமான விடயம் என்னவெனில் சகல பழைய மாணவர்களின் விபரங்களும் (Database) இணைக்கப்பட இருப்பதனால் எமது பழைய சகமணவர்களுடன் இலகுவான முறையில் தொடர்பு கொள்ள முடியும்.

இத்தளத்தை மேலும் சிறந்ததாக மாற்றுவதற்கு உங்களது சகல ஆக்க பூர்வமான ஆலோசனைகளை பழைய மாணவர்கள் சங்க கனடா கிளை ஆவலுடன் எதிர் பார்க்கின்றது. உங்கள் ஆலோசனைகளை அனுப்ப வேண்டிய முகவரி info@victoriacollege.com.

உத்தேச மாதிரி இணையத்தளம்

1. Home - Introduction
2. History
   - History
   - Anthem
   - Logo
   - School map
3. Infra Structure
   - Clubs
   - Library
   - Sports
   - Student Support
   - Temple
4. Principal and Staff
5. Photo Gallery
6. O.S.A.
   - Australia
   - Canada
   - Chulipuram
   - Colombo
   - France
7. List of Old Students (Database)
8. Register Online to Old Students
9. Hot news
10. Feed Back or Comments

தர்மலிங்கம் - சுரேஸ்குமார்
உபசெயலாளர்
பழைய மாணவர் சங்கம் - கனடா கிளை

இணையத்தளம் உருவாக்கம்
குமாரவேலுப்பிள்ளை நந்தகுமாரன்
வேல்மகிமன் வேலாயுதம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

தமிழீழ மண் மீட்புக்காகவும் தமிழ் மக்களின் விடிவுக்காகவும் எம் பிஞ்சுகளான மாவீரர்கள் தம் நெஞ்சங்களை நெருப்பாக்கி நஞ்சுமாலைக் கழுத்தினராய் கள முனைப்புடன் முந்தி வியக்க நிமிர்ந்தது நின்று உலகமே எண்ணிப்பார்க்கமுடியாதவாறு போர் புரிந்து வீரமரணமடைந்தனர். எம் நெஞ்சை விட்டு அகலா மாவீரர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்களின் நலனையும் முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டு தன்னலமற்ற உணர்வுடனும் தியாகமனப்பான்மையுடனும் சேவையாற்றி மாணவர்களை நல்ல நிலைக்கு ஆளாக்கி விட்டு இன்று எம் மத்தியில் இல்லாது மறைந்த முகாமையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

தாம் கற்ற கல்லூரியை மறவாது கல்லூரியினது நலனைக் கருதிக் கொண்டு கல்லூரிக்கு சரீர உதவியும், பொருள் உதவியும் தந்து இன்று எம் மத்தியில் இல்லாத பழைய மாணவர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி
மாணவர் சங்கம்
கனடாக்கிளை



# நெஞ்சம் மறப்பதில்லை

அன்பின் விக்கியே, நீர் உமது படிப்பினை யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் படித்து வந்தீர். ஆதலால் நீர் அந்தப் பள்ளிக்கூடத்தின் பழைய மாணவன் என்ற உணர்வுடன் இடம் பெயர்ந்து கனடா நாட்டிலும் அதனை மறக்காமல் அக்கல்லூரியின் பழைய மாணவர் கனடாக் கிளையின் அங்கத்தவர் ஆகவும் செயற்குழு உறுப்பினர் ஆகவும் இருந்து குறுகிய காலத்தில் நீர் செய்த செயல்கள் பற்பல. இதனை யாராலும் மறக்கவும் மறுக்கவும் ஈடு செய்யவும் முடியாது.

கல்லூரியின் 125வது ஆண்டு நினைவு மலர் வெளியிட வேண்டும் என்று முழுமூச்சுடன் செயற்பட்டு அதற்குத் தேவையான விளம்பரங்கள் அனைத்தையும் எமக்குப் பெற்றுத் தந்து, மலர் வெளியிட முன்பே நீர் எம்மைவிட்டு சென்றுவிட்டீர்.

அன்பின் விக்கியே, நீர் எம்மை விட்டுச் சென்றாலும் நீர் எம்முடன் மனமுவந்து செய்த பணி தொடரும் என உறுதி அளித்து உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈஸ்வர விநாயகர் முருகனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், கனடாக்கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS FROM*

# KANARA TRANSERVICE CO.

**யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் 125வது ஆண்டு மலர் சிறப்புற அமைய எல்லாம் வல்ல சுழிபுரம் பருளாய் வினாயகர் முருகனை வேண்டி நின்று வாழ்த்துகின்றேன்**




**KANDIAH KANANATHAN (KANA)**
**OWNER/OPPERATEER**

*BUS TEL: 416-989-7115*
*RES/FAX: 416-740-3882*
*E-mail: KANARA-TRANSERVICE-CO.YAHOO.COM*

**2777 KIPLING AVE, #1514**
**ETOBICO, ONTARIO**
**M9U 4M2, CANADA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரோறியா நீ வாழ்க பல்லாண்டு

கல்வி நின் பெருமை ஓங்க
கவின் தமிழ் புலமை ஓங்க
வல்லநன் வலிகாமம் மேற்கு
வாழனர் திறனும் ஓங்க.
நல்லதோர் நோக்கம் கொண்டு
நயந்த நல் சுளிபுரம் இந்து
மெல்லவே வளர்ந்து பேராய்
மிளிர் வினைப் போற்றுவோமே!

ஆயிரத்துத் தொழாயிரத்து
எண்ணூற்றி எழுபத்தாறே
தூயதொல் ரசவப் பற்றி
துலங்கியே ஆங்கிலத்தும்
ஆயபேர் அறிஞர் ஆன்றோர்
அளித்த பேருக்கம் தொண்டு
ஏயதோர் "விக்ரோறியா" வாகி
உயர்ந்தநன் கல்லூரி வாழ்க!

பாமரர் பலரை மண்ணில்
பல்கலை கற்கத் தூண்டி
மா கொன்றை நிழலை வைத்தும்
மாணவ மணிகள் ஆக்கி
சீமையும் ஏகி வாழ
சிறந்த சீர் கல்வி தந்து
சான்றவர் ஆக்கி எம்மை
சர்வமும் மெச்ச வைத்தாய்!

ஆனநம் அதிபர் மூத்தோர்
ஆற்றிய பணிகள் தொட்டு
ஆசிரியர் உபாத்தி மார்கள்
ஆற்றலும் கணிக்கப் பெற்று
சீர் சிவபாத சுந்தரனார் அதிபர்
சிவசுப்பிரமணியம் ஈறாய்
பேர்பெறு பெற்றோர் பங்கும்
போற்றியே வாழ்தல் நன்றாம்.

மண்ணில்நல் வண்ணம் வாழ
மாந்தர்க்கு அறிவைப் போல
கண்ணென போற்றும் நல்ல
கல்வியைக் கற்க வென்றே
எண்ணரும் பள்ளிக் கூடம்
ஏற்றமாய் அமைத்துத் தந்த
மண்ணரும் முதலியார் செல்லப்பா சீ. எம்
மாண்புறு கனக ரட்ணம் போற்றி!

பேர்பெறு கூடப் பணிகள் ஆற்றி
பெருந்தகைகளாய் வாழ்க
சீர் சிவபாத சுந்தரனார் சீமை
"Small Willoughby" மற்றும்
தேர்வுறு திருவாளர் தம்பு தம்பியப்பா
தென்னகம் நாராயணன் மேனன்
ஆர்வலர் அருளானந்தம் இன்னோர்
அனைவர்க்கும் நன்றி நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரென உழைத்தவல் திருமதியே
வேற்பிள்ளை ஏற்பத்மநாதன்
சீருறுலஸ் சுப்பிரமணியம் மற்றும்
சைவநற் பெரியார் நாயுடு
ஊர் புகழ் கே அருணாசலம் உகந்தபேர்
இராச சுந்தரம கே. சந்திரபாலன்
பார்மிக மெச்சும் வண்ணம் பகர்ந்தே
பயனுறப் போற்றுவோமே

தமிழ் ஈழ வளர்ச்சி ஓங்க
        தரணி கை தந்த வேளை
தகவினை உணர்ந்த சீமை
        தந்த நல் மான்யங்கள்
தரத்தினை உயர்த்தி மேலும்
        தளவாடம் வாங்கி நலல்
ஆய்செய் கூடம் உற்றும்
        உயர் நிலை ஆனோம் கண்டீர்!

வெற்றி பொன் பவளம் வைர
        விழாக்கள் காண் உந்தனுக்கு
அற்றி நாம் உவந்திட்டாலும்
        எதுவுமே ஈடாகிடாது!
வல்ல நூற் றிருபத்தைந்தின்
        வாழ்வகவில் மகிழும் நின்னை
வெல்லக பல்லாண்டு வாணி என்றே
        வாழ்த்தினோம் வளர்க நன்றி

திருமதி ஈஸ்வரி சிவாசின்னத்தம்பி
10-02-02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

(∴) தங்களது வருகைமூலம் எம்மைக் கௌரவித்துக்கொண்டிருக்கும் சிறப்பு விருந்தினர்களே சோழியபுரத்தின் மைந்தர்களே பாடசாலைக்கு பெருமைசேட்டிக் கொடுத்தவர்களே.

பாடசாலையில் படிக்கும்காலத்தில் அறிஞர் என்று கூறுவார்கள் இன்று அறிஞர் எனற பட்டம் பெற்றவரும் ஒன்ராரியோ மாகாணத்தினால் கல்வி ஆலோசகராக பதவிவகிப்பவரும் கனடா தமிழீழச் சங்கம் இனைபாளர் சாமி.அப்பாத்துரை(பி.எ) அவர்களுக்கும்

உதயன் பத்திரிகை ஆசிரியரும் ஒன்ராரியோ மாகாணத்தினால் சத்தியபிரமான ஆணையாளருமாக நியமனம் பெற்றவரும் கனடாவின் மூத்தஎழுத்தாளருமான ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்கட்கும்.

(∴) விளம்பரங்கள் தந்துதவி ஒத்துழைப்பு நல்கிய வர்த்தக பெருமக்களுக்கும்.

(∴) 125ம்ஆண்டு சிறப்பு மலரை குறுகிய காலத்தில் திறம்படவும் பொறுப்பாகவும் முன்னின்று செயலாற்றிய சிவப்பிரகாசத்திற்கும் (சிவா). அச்சேற்றிய Mc REPRODUCTION அச்சகத்தினருக்கும்.

(∴) அச்சுவடிவமைத்து தந்த ராஜன் (யோன்) அவர்கட்கும்

(∴) விளம்பரக் கொடி(வன்னர்)செய்து தந்து உதவிய யோகேஸ்வரன்னுக்கும்

(∴) ஒலியமைப்புச் செய்து கொண்டிருக்கும் பாலா விற்கும்

(∴) வீடியோவில் படமாக்கி கொண்டிருப்பவர்களுக்கும் புகைப்படம் பிடித்துக் கொண்டிருபவர்களுமாகிய சுதர்சன் சிவஜெயந்தன அவர்கட்கும்..

(∴) விளம்பரம் செய்த உதயன் பத்திரிகையினருக்கும்.

(∴) 125ம்ஆண்டு மலரில் கட்டுரைகளும் கவிதைகளும் தந்துதவிய அதிபர் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் நலம்விரும்பிகள் அனைவருக்கும்.

(∴) சிற்றுண்டி தந்து உதவிய நியூ தேவி உணவக உருமையாளருக்கும்

(∴) மண்டபம் தந்து உதவிய யோன்(JOHN) அவுர்கட்கும்

(∴) விழாச் செலவின் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்ட சூரியாஸ்(Gift&Textiles) மஞ்சுளா பாஸ்சன் அவர்கட்கும்

(∴) **Promar** ஸ்தாபனத்தினர் சேவைச் சின்னம் அங்கத்தவர்கள் அடையாளச்சின்னம் பாராடடுச் சின்னம் திறம்பட செய்து தந்தமைக்கும்.

(∴) இவ்விழாவில் தங்கள் கலை நிகழச்சிகள் மூலம் சிறந்ததொரு விழாவாக ஆக்கிகொண்டிருக்கும் அனைத்து கலைஞருக்கும வளரும் சிறுவர் சிறுமியர் களுக்கும் அவர்களது பெற்றேருக்கும் ஆசிரியர்கட்கும்.

(∴) கலை நிகழ்சியை மெருகூட்டிய பக்கவாத்திய கலைஞயர் களுக்கும்

(∴) இன்னும் எமது பாடசாலை வளர்ச்சிக்கு பங்களித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும்.

(∴) முக்கியமாக இவ்விழாவை ஓர் சிறந்தெரு விழாவாக்கிதரவேண்டும் என்ற உள்ளுணர்வுடன் பொறுமையாக ரசித்த சபையோருக்கும். இந்நிர்வாக சபைக்கு ஆதரவு தந்துதவிய அனைத்துக் கனடா அமரிக்கா வாழ் பழைய மாணவர்களுக்கும் சுழிபுரம் கிராமசேவை பகுத்யில் வாழ் மக்களுக்கும் இருகரம் கூப்பி நன்றி நவிலுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்..

## நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WEXFORD CASH MART

## FINANCIAL SERVICE

எமது நிறுவனம்
பணமாற்றுச்
சேவையில்
மூன்றாவது
வருடத்தை நோக்கி




MONEY TRANSFER (WORLDWIDE)

அலைகள்
மத்தியில் ஓர்
அசையாத
பயணம்

வட அமெரிக்காவில் இருந்து வன்னி வரை ஸ்ரேர்லிங் பவுண்,
அமெரிக்கன் டொலர் வாங்கவும் விற்கவும்
ஐரோப்பாவுக்கான அதியுயர் நாணயமாற்று விகிதம்
Western Union Agency (10 நிமிடங்களில் உலகின் எந்த மூலைக்கும்)
இந்தியாவில் சென்னை, திருச்சி, உட்பட ஒரு சில இடங்களுக்கு மட்டும்
கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம், உறவினர் வாசற்படி வரை

## வன்னிக்கு எமது சேவையை விரிவுபடுத்தியுள்ளோம்

ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு, மல்லாவி, விசுவமடு ஆகிய இடங்களில் எமது முகவர்கள் மூலம் 24 மணித்தியாலத்தினுள் பணம் எடுக்க ஒழுங்கு செய்துள்ளோம். முகவரி தொலைத்து நிற்கும் உறவினர்களுடன் தொலைபேசி இணைப்புகளை ஏற்படுத்த உதவி செய்கின்றோம்.



TEL: (416) 285-7709 FAX: (416) 752-1548

1823A LAWRENCE AVE. EAST, SCARBOROUGH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org